Pattabi's FB Journal May 2024



மே 2024

பட்டாபி

முகநூல்

இதழ்

A Banner of Pluralism

2024 மே மாதம் முழுதும் முகநூலில் இடப்பட்டவைகள் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளன. ஆர்வம் உள்ளவர்க்கு கருத்து சுரங்கம்.. பார்க்க படிக்க பயனுறுக

Pattabiraman R

FB Postings May 2024

முகநூல் மே இடுகைகள்

மே 1

May Day Wishes

Let the focus be on the issues of

Migrant Laborers

Gig workers

Agriculture Labours

And

Domesticworkers

மே 2

Gandhi A Life in Three Campaigns 2023ல் வந்த புத்தகம். ஆயிரக்கணக்கான காந்தி குறித்த புத்தகங்களுக்கு பின்னரும் வேண்டுமா என்கிற கேள்வியை எழுப்பிக்கொண்டு விடை தேடும் புத்தகம். ஏதோவொரு புதிய செய்தியை, புதிய சிந்தனை தெறிப்பை முன்வைத்துவிட முடியாதா என்கிற முயற்சியில்தான் காந்தியுடன் வாழ்ந்தவர்கள், பழகியவர்கள், பார்த்தவர்கள், வாசித்து அறிந்தவர்கள், அறிய முற்படுகிறவர்கள் எழுத தலைப்படுகிறார்கள்.

காந்தி வாசிப்பு சாலை மிகவும் நீள அகலமானது. சென்று கொண்டேயிருக்கலாம். செல்லும் வழி தோறும் இளைப்பாறிதொடரலாம். அது ஒரு வகையிலான அவரவர் வாழ்வின் தேடலும் கூட. தினந்தோறும் கண்ணாடி பார்த்தல். கோணல்களை அறிதல். ஏன் இப்படி மாற்றிக்கொள்ள முடியாதா என்கிற தினப் போராட்டமது.

சரி. இந்த A Life in Three Campaigns புத்தகத்தை புகழ்வாய்ந்த எம் ஜே அக்பர் எழுதியுள்ளார். முன்னுரையை நட்வர் சிங் சுருக்கமாக தந்துள்ளார். படிக்க படிக்க தோன்றிய செய்திகளை சுருக்கமாக முன் வைக்கலாம். ஒத்துழையாமைக் காலம், உப்பு சத்தியாகிரகம், குவிட் இந்தியா என்கிற காலங்களை வைத்து பின்னப்பட்டுள்ள பிரதி.

பக் 60 ல் எம் ஜே அக்பர் வரிகளிலிருந்து

The Mahatma believed that as God had no religion, every religion led to God. It was only logical that he should be a fierce opponent of conversion: if all roads led to God , it was invidious to claim that any one road was superior. God’s grace was not monopoly of any segment of the human race

இன்றுள்ள election campaign நடக்கும் லட்சணத்தை ஒத்துப் பார்ப்பதற்கு இந்த வரிகள் உதவலாம் போலத் தோன்றுகிறது. இந்து எதிர் முஸ்லிம் உரையாடல்களை தீவிரப்படுத்துவது- என் உயிர் இருக்கும்வரை முஸ்லீம்களுக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதிக்க மாட்டேன் என உள் வெறுப்பை விசிறி விடுதல், சிவா ராமனை வெல்வார் என குழந்தைத்தனமாக பேசுவது என்பதையெல்லாம் காண்கிறோம்.

தேர்தலை கடவுள் சண்டைகளாக்கி புராணப்படுத்துகிற மனநிலையில் ஆட்சிக்கான தலைவர்கள் இருந்தால், எப்படி செக்யூலர் சாலை விபத்தில்லாமல் இருக்கும்.

இந்துக்கள் சாதிவாரியாக ஒடுக்கு முறைகளை அனுபவித்து முன்னேற வழியின்றி தீண்டாமை கொடுமைகளின் இடர்களில் இருந்ததால் இட ஒதுக்கீடு , சமுக கல்வி தள பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு என்கிற affirmative actions தேவைப்படுகிறது. இந்தக் கொடுமைகாரணமாக அல்லது வேறு காரணங்களால் மதம் மாறிப்போனாலும் , அங்கும் சமூக கல்வியில் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிற சிறுபான்மை முன்னேற்றம் என்பதற்கு எங்களிடம் இந்த மாற்று வழி இருக்கிறது எனச் சொன்னால் கூட புரிந்துகொள்ள முடியும். என் உயிர் இருக்கும்வரை அனுமதிக்க மாட்டேன் என பெரிய மனிதர் சவால் விட்டால், அவரது மன விசாலத்தை எப்படி அளப்பது…

எம் ஜே அக்பரின் Gandhi A Life in Three Campaigns ல் இரண்டாவது அத்தியாயம் salt in the wound. அதில் காந்தி செய்திட்ட இரு எதிர்வினைகளை படித்தபோது, அப்படியே இன்றைய தேர்தல் கால அரசியல் மன அழுக்குகளுக்கு பதிலாகத் தோன்றியது.

ஒன்று , காந்தி திருவாளர் பி எஸ் மூஞ்சே அவர்களுக்கு செய்த எதிர்வினை. மூஞ்சே இந்து மகாசபை தலைவர். சாவர்க்கருக்கு ஹெக்டேவருக்கு நெருக்கமானவர். அவர் ஒருமுறை இந்துயிசத்தின் பிரிக்கமுடியாத பகுதியாக தீண்டாமை இருக்கிறது என காந்தியே கருதினார் எனத் தெரிவித்திருந்தார். அதற்கு காந்தி ஆற்றிய எதிர்வினையிலிருந்து எம் ஜே அக்பர் சில வரிகளைத் தருகிறார். அதில் எதிரிகளை அடிக்க அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்வார்கள் , அவர்கள் பேசுவது சிதைத்து தெரிவிக்கப்படும் இந்துயிசம் என காந்தி புரிந்து வைத்துள்ளதை காட்டுகிறது. அக்பர் வரிகள் (காந்தி வால்யூம் 38)

" Gandhi was not surprised for, in his words, Moonje's Philosophy admitted of any means for beating an opponent with..

"I do not regard untouchability as is now practised as a part of the Hindu religion, and that if I could persuade myself that it was , I should disown Hinduism. Happily for me, my Hinduism does not bind me to every verse because it is written in Sanskrit..

But let me tell you (Moonje and others) with all deference that inspite of your literal knowledge of the Shastras, yours is a distorted kind of Hinduism..

மேற்கூறிய எதிர்வினையை காந்தி மே 14, 1927 ல் செய்துள்ளார்.

மற்றொரு எதிர்வினை இன்று தேர்தல் உரைகளில் வெளிவருகிற உஷ்ணப் பேச்சுகள் பற்றிய வரையறை போல எனக்கு தோன்றியது.

அமெரிக்க மாது காதரின் மாயோ எழுதிய மதர் இந்தியா பற்றிய எதிர்வினையை உடனடியாக காந்தி செய்யவில்லை. படிப்பதைக் கூட தள்ளிப்போட்டு வந்தார். ஊரெல்லாம் பேச்சான பின்னர், அதைப் படித்துவிட்டு அப்புத்தகம் இந்தியர் குறித்து வீசிய கடுமைக்கு எதிர்வினை தந்தார். மேயோ புத்தகம் குறித்து தனது பதிலை Drain Inspector's Report சாக்கடை ஆய்வாளர் அறிக்கை என எழுதியிருந்தார். வாயில் பொல்லாத்தனத்தை வைப்பதே நன்னடத்தை என்றால் என்ன செய்வது என்கிற பொருள்தருகிற சமஸ்கிருத பாடலை காந்தி தன் பதிலில் எடுத்தாண்டார். அக்பர் ஆங்கில வரிகளைத் தருகிறார்.

On the lips of the good vice becomes virtue

And even virtue appears as vice in the mouth of the

Evil minded, this need not surprise us.

For do not the mighty clouds drink the salt waters

Of the ocean and return it as sweet referencing rain,

And does not the cobra, drinking the sweet milk, belch

It forth as the deadliest poison

இதை ஒட்டி வேறு ஒரு வம்பு செய்தியையும் அக்பர் தருகிறார். சென்னை 1927 காங்கிரசில் நேருவின் அவசரம் குறித்தும் இயற்றப்பட்ட முழுவிடுதலை தீர்மானம் குறித்தும் காந்தி விமர்சித்து நேருவிற்கு கடிதம் எழுதினார். பொறுக்கமுடியாத நேரு, காந்திக்கு ஸ்தாபன ஒழுக்கம் குறித்து எழுதியதுடன், காந்தி கூட இந்திய காதரின் போல மேற்கு நாகரிகம் குறித்த சாக்கடை ஆய்வாளராக இருக்கிறார் என்று எழுதினார். காதரினுக்கு காந்தி எழுதிய எதிர்வினை நல்ல தாக்கத்தை உருவாக்கிவிட்டதாக எடுத்துக்கொள்ளலாம்.

250 பக்கங்கள் கொண்ட அக்பரின் காந்தி குறித்த புத்தகம் இப்படி சில சுவையான செய்திகளுடன் நகர்கிறது.

மே 2

பெண் ஏன் அடிமையானாள் ' - பெரியார் அவர்களின் செவ்வியல் எனலாம். தற்போது அமேசானில் பல விலைகளில் (ரூ 50 துவங்கி கிடைக்கிற புத்தகம்).

பெரியார் அவர்களால் குடிஅரசில் 1926-31 ஆண்டுகளில் எழுதப்பட்ட 10 கட்டுரைகளின் 'தொகுப்பு' நூலானது. ஜனவரி 1942ல் பெரியார் எழுதிய முன்னுரையில் :

" இப்புத்தகக் கருத்துகள் இன்றைய நிலையில், எந்த மதத்திற்கும், எந்த தேச மக்களுக்கும், எந்தச் சமூகத்தாருக்கும் பயன்பட்டாக வேண்டும் என்பதே நமது கருத்தாகும். இப்புத்தகத்தை பெண்கள் மாத்திரம் அல்லாமல், பெண்களிடம் ஜீவகாருண்யமும், சமத்துவ உணர்ச்சியும் கொண்ட எல்லா ஆண் மக்களும் வாங்கிப் படித்துப் பார்த்துத் திருந்தவேண்டியது அவசியம் என்றே கருதுகிறோம்"

கற்பு, வள்ளுவர் கற்பு, காதல், கல்யாண விடுதலை, மறுமணம், விதவைகள் நிலை, விபச்சாரம், சொத்துரிமை கர்ப்பத்தடை, பெண் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் என 10 தலைப்புகளில் சுருக்கமாக , மனதில் புத்தியில் பட்டவகையில் பெரியார் தனது அனைத்து தீவிரத்துடன் விவாதித்திருப்பார்.

இந்த ஆண்டு மகளிர் தினத்தில் மூத்த தொழிற்சங்க, பென்சனர் இயக்கத் தலைவர் தோழர் முத்தியாலு இந்நூலின் 50 காப்பிகளை பெண்கள் மத்தியில் வாங்கி கொடுத்த தகவலைச் சொன்னார். நல்ல முன்னுதாரணத்தை தோழர் முத்தியாலு ஏற்படுத்தியுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இந்த சிறிய நூலை படித்திருப்பர். பெரியார் விரும்பிய சில மாற்றங்களாவது சமூகத்தில் உருவாகி வருவதைக் காணமுடிகிறது. நூற்றாண்டை தொடப்போகும் எழுத்துக்கள், எழுதப்பட்ட அந்த சூழலில் தீவிரமாக (radical) ஆக பார்க்கப்பட்டிருக்கும். இப்போதும் கூட இவ்வெழுத்துக்கள் சிலருக்கு cultural shock தரக்கூடியவையாக இருக்கலாம்.

பெண் கல்வியும், வேலை வாய்ப்பும் பெருகும் சூழல் , ஆண்களைப் போல தாங்களும் சுதந்திர உணர்ச்சியில் (independent) சற்றும் குறைந்தவர்களில்லை என்ற மனப்பாங்கை ஆழமாக வேறூன்ற வைத்துள்ளது. இனி வரும் காலத்தில், இந்த சுதந்திர உணர்ச்சி மேலும் மேலும் கூடி பலப்படும் பாதையே தெரிகிறது. இளம் ஆண், பெண் என்பதில் எவ்வித வேறுபாடும் இனித் தெரியலாகாது, பாரபட்சமாக நடத்துதல் ஆகாது என்ற உணர்வும் கெட்டிப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், திலகவதி அவர்கள் போலீஸ் துறையில் gender sensitisation முகாம்களை அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் நடத்தினார். நாகை எஸ் பி அப்பகுதியில் இன்ஸ்பெக்டர்- சப் இன்ஸ்பெக்டர்களுக்கு நடந்த பயிற்சிக்கு உரையாளராக என்னையும் அனுப்பியிருந்தார். திருச்சியில் இப்படி உரையாளர்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதற்கும் தனி முகாம் நடந்த நினைவு வருகிறது.

என் காலத்து conservative சிந்தனைகளிலிருந்து , இன்றைய ஆண் இளைஞர்களும் விடுபட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. ஆணுக்கான சிறப்பு சலுகை கோரல்கள் சற்று மட்டுப்பட்டு வருகின்றன. அடுப்பங்கரையிலிருந்து விடுதலை என்பது பெரும் சமூக பிரச்சனைதான். Kitchen less Home என்பது நனவாகிவிட்டால், அது மாபெரும் விடுதலையாகலாம். காலம் எப்படி குடும்பமுறைகளை reconstruct செய்து balance ஆக்கும் என ஊகிக்க முடியவில்லை.

குடும்பம் என்கிற institution பெரும் சமூக பழக்கமாகியுள்ளது. அதுதான் சாதி, மதம், கம்யூனிட்டி பழக்கம் , சடங்கு முறைகள், சொத்து பத்து நிர்வாகம் என அனைத்திற்கும் அடிப்படையாக நிற்கிறது. கூட்டு குடும்பங்கள் சாத்தியமில்லை என்கிற பொது புத்தியும், உணர்வும் நன்றாகவே நடைமுறைக்கு வந்துவிட்டன. ஆனாலும் குடும்பங்கள் கிளைகளாகப் பிரிந்து இன்னும் நியுக்ளியர் குடும்பமாக இருக்கின்றன.

மேற்கின் பழக்கங்களும், இந்திய சமூக பழக்கங்களுமான mix ஆக புதிய தலைமுறை வளர்ந்து வருகிறது. Rooted ஆகவும் radical ஆகவும், questioning nature உடனும் இளம் தலைமுறையினர் வளர்ந்து வருகின்றனர். அவர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றல் அபாரமாக இருக்கிறது.

பிரிட்டிஷாரிடமிருந்து தேச விடுதலை என்ற போராட்டம் தீவிரம் கொண்ட சூழலில், காந்தி அம்பேத்கர் பெரியார் ஆகியோர் சமூக மாற்றம் என்பதிலும் தீவிர செயலூக்கப் பார்வையை செலுத்தினர். அந்நேர பெரியாரின் பெண் விடுதலையை முன்வைக்கும் இவ்வெழுத்தை Manifesto for the liberation and empowerment of women என புரிந்துகொள்ளலாம்.

இவ்வுலகில் இயற்கையின் கருணையால் மனிதர்களிடம் unisex என்பதில்லை. சமூகம் உருவாக்கி வளர்த்தெடுத்த second sex என்கிற பார்வை மறையும் திசைக்கான மாற்றம் வேகமெடுத்துள்ளது.

மே 3

The real triumph of the caste system lies not in upholding the supremacy of the Brahmin, but in conditioning the consciousness of the lower castes in accepting their inferior status in the ritual hierarchy as a part of the natural things

- Mandal report vol 1,2 para 4.5 page 28/144

Rajni Kothari said

"The caste system made available to the leadership structural and ideological basis for political mobilisation

the leadership was forced to make concessions to local opinion, take its cue from the consensus that existed as regards claims of power, articulate political competition on traditional lines and in turn, organise castes for economic and political purpose.."

Mandal Report para 5.6 page 32/144

மே 3

ஆர் எஸ் எஸ் ஆண்டறிக்கை ஒன்றை 2023-24 படிக்க நேர்ந்தது. அடுத்து அதன் தலைவராகப்போகிறவர் எனக் கருதப்படுகிற பொதுச்செயலர் திரு தத்தரேய ஹோசபலெ அறிக்கையை வைத்துள்ளார். ஆர் எஸ் எஸ் என்ன செய்தது, எவற்றை திட்டமிடுகிறது என்பதை ஓரளவிற்காவது இவ்வறிக்கை வெளிப்படுத்தும்.

இதற்கு முந்திய ஆண்டுகளில் சினிமாத்துறை ஆளுமைகள் சந்திப்பை அது ஏற்படுத்தி அவர்களிடம் தங்கள் எதிர்பார்ப்பை தெரிவித்தது ஆர் எஸ் எஸ் -என்ற செய்தியை வெளிப்படுத்தியிருந்தேன். பின்னர் வந்த பல சினிமாக்கள், ஓடிடி சீரிஸ் எல்லாம் தங்கள் இந்தியரின் மஸ்குலின் தனத்தை, போர் வெற்றியை, திறம்பட தாக்குதல் செய்வதை, அதீத தேசப்பக்தியை வெளிப்படுத்தி வரத்துவங்கின. ஆர் எஸ் எஸ் அரங்கிற்குள் என்ன பேசுகிறார்கள் என்பது ஒருவருக்கு தெரியாமல் போகலாம். ஆனால் அவர்கள் வெளியிடும் அறிக்கைகளை காணத்தவறுவது, அலட்சியமாக கடந்து போவது சரியானதா எனத் தெரியவில்லை. அவர்கள் வேலைப்பாங்கை ஓரளவிற்கு இவ்வறிக்கை மூலம் அறியலாம்.

2025ல் அவர்கள் நூற்றாண்டு கொண்டாட இருக்கிறார்கள். 5 வகை மாற்றங்கள் என ஹிந்தியில் நாமகரணம் சூட்டி அதற்காக வேலைத்திட்டம் என்கிறார்கள்.

அவர்களுடைய ஷாகாக்கள் 2023ல் 68651- 2024ல் 73117 என உயர்ந்துள்ளது. இதை மேலும் அதிகரிக்க வேண்டுமாம்.

உலக இந்து மாநாடுகள் 2023ல் பாங்காக் தாய்லாந்தில் நடத்தியுள்ளனர்.

கௌஹாத்தியில் முன்னாள் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடத்தி experience narration and dialogue என்பதைச் செய்தனர்

பாஞ்சன்யா வார இதழ் சார்பில் எழுத்தாளர் அமர்வு ஒன்றை செப் 2023ல் ரிஷிகேஷில் நடத்தினர்

விவேகானந்தர் பிறந்த நாளில் இளைஞர்களை திரட்டி கல்கத்தாவில் lectures

Ancient Culture and Traditions என்பதின் 8 வது மாநாட்டை ஜனவரி 2024ல் திப்ருகரில் நடத்தினர்.

குஜராத்தில் விளையாட்டுத்துறை ஒர்க்ஷாப் ஒன்றை ஆர் எஸ் எஸ் காரர்களுக்கென 2023ல் நடத்தினர்.

மாநில வாரியாக பணிகளை பட்டியலிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் வெள்ளக் காலத்தில் நிவாரணப்பணிகள் செய்தவை பற்றியும், தூய்மை தூத்துக்குடி என்கிற பணி செய்ததையும் சொல்கின்றனர்.

புனே நகரில் வர்த்தக சபை சார்பில் Philisophy of India's Economic policies என்கிற செமினார் ஒன்றை செய்துள்ளனர்.

Literary Festivals என நகர்களை தேர்ந்தேடுத்து நடத்தி வருகின்றனர். ஆர் எஸ் எஸ் பிரசுரங்கள் விற்பனை இயக்கம்.

கிராமங்களை நோக்கி கிராம காரியம் ராம காரியம் என்கிற முழக்கத்துடன், மக்களை சந்தித்தல் பிரச்சனைகளை அறிதல், folk dance போன்ற நடவடிக்கைகள்- 10 கிராமங்களுக்கு cluster- self reliance employment போன்றவற்றை சோதித்தல்

மதம் மாறியவர்களுக்கு இட ஒதுக்கீடு சலுகை கூடாது என்கிற எதிர்ப்பு இயக்கம் கட்டுதல். 4500 அமைப்புகளின் சார்பில் அரசாங்கத்திடம் குரலை எழுப்புதல். இதைத்தான் ,ஆர் எஸ் எஸ் எடுத்த இந்த முடிவைத்தான் பிரதமர் உட்பட பாஜக தலைவர்கள் 2024 தேர்தல் உரையில் அழுத்தமாக கொண்டு செல்கின்றனர்.

103 நாடுகளைச் சார்ந்த 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து 6 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆன்லைனில் பங்கேற்ற சுற்று சூழல் சார் போட்டிகளை நடத்தியது

தேசத்திற்காக மரம் ஒன்றை வைப்பீர் என்கிற இயக்கத்தை நடத்தியது

அக்டோபர் 6 2023ல் வைக்கம் சத்தியாகிரக நூற்றாண்டு நிகழ்வை வைக்கத்தில் கூடி நடத்தியது.

பிப் 12 2024ல் மகாவீரரின் 2550 ஆண்டை சிறப்பாக விஞ்ஞான் பவன் நிகச்ச்சியாக கொண்டாடியது.

ஜன 17, 2024ல் சத்திரபதி சிவாஜி முடிசூட்டியதின் 350 ஆண்டை அம்பேத்கர் சர்வதேச மய்யத்தில் கொண்டாடியது.

National selfhood என்கிற விழிப்பை தீவிரப்படுத்துவது

அந்த ஹிந்தி ஆங்கில இருமொழி அறிக்கையின் சில முக்கியமாக எனக்குப்பட்ட அம்சங்கள் இங்கு சொல்லப்பட்டுள்ளன. ஆங்கிலப் பகுதியில் அந்த அறிக்கை இப்படி முடிக்கப்பட்டுள்ளது

The situation is excellent. Centenary year is beckoning us.

Let us advance with confidence- let us work with certitude

Time is ours, it is waiting for us

மே4

காந்தி இர்வின் உடன்பாடு பற்றி பள்ளிக்கூடத்திலிருந்து திட்டு திட்டாக படித்து வந்திருப்போம். உப்பு சத்தியாகிரகம், அடக்குமுறைகள் தொடர்ந்து வைஸ்ராய் இர்வினுடன் பேச்சு வார்த்தை என காட்சிகள் நகர்ந்தன.

சாப்ரும் ஜெயகரும் அலைந்து காந்தி இர்வினை சந்திக்க வைத்தனர். பகத்சிங் தூக்கு என்பதும் சர்ச்சையானது. இன்றுவரை காந்தி மீதான சந்தேகங்கள் நின்றபாடில்லை.

இங்கு சொல்ல வந்தது எம் ஜே அக்பர் தனது Gandhi A Life in Three Campaigns ல் தருகிற சுவாரஸ்யமான செய்தியை..

வைஸ்ராய்க்கு இணையாக இந்தியர் அரை ஆடையுடன் சரி சமமாக நடத்தப்பட்டது மட்டுமல்ல, ஏதோ இரு நாடுகளுக்கான treaty போல் ஒப்பந்தமும் போட்டது , அன்றைய சூழலில் சாதாரண விஷயமல்ல. சரி சுவாரஸ்யத்திற்கு வரலாம். ஆட்சியாளர் என்றால் நியாயம் தரக்கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்கிற message இதில் நமக்கு கிடைக்கும்.

இர்வினுடன் உரையாடல் நடந்துகொண்டிருந்த போது , காந்தி கஜினி முகமதுவை சுட்டிக்காட்டி நிகழ்வொன்றைச் சொல்கிறார். கஜினி அவைக்கு , வெகுதூரத்திலிருந்து நியாயம் கோரி பெண் ஒருவர் வருகிறார். கஜினியும் பிரச்சனை என்ன என அறிகிறார். அவ்வளவு தூரத்தில் அந்த remote placeல் வாழும் உங்களுக்கு என்னால் எப்படி உதவ முடியும் என மன்னர் கஜினி ஏமாற்றமளிக்கிறார். அப்பெண் சற்றும் எதிர்பாராத அதிர்ச்சியை கஜினிக்கு தருகிறார். Then you stop ruling us. கணினிக்கு ஆட்சி நியாயம் புரிகிறது. ஆம் என்னால் நியாயம் செய்யமுடியவில்லை எனில் , அங்கு நான் ஆளவும் கூடாது என உணர்ந்து அப்பெண்ணிற்கு ஆக வேண்டியதை செய்திட உத்தரவிட்டாராம். ஈரம் சுரக்காத இதயம் ஏது. இதை இர்வினிடம் சொல்லிவிட்டு காந்தி சிரிக்கிறார்.

கஜினியைக் காட்டி பிரிட்டிஷாரிடம் காந்தி நியாயம் கேட்டதை இர்வின் உணர்ந்து சிரித்துக்கொண்டே பதில் அளிக்கிறார் - justice should be done.

No right to rule over the territory where he or she cannot enforce justice

மே5

கற்றுக்கொள்பவர்கள்- கற்றுக்கொடுப்பவர்கள், படிப்பவர்- எழுதுபவர் என்றும் வைத்துக்கொண்டால்- அவர்கள் இருவகையிலாய் அமைவதை உணரமுடிகிறது.

ஒன்றை - ஓர் இசத்தை, சிந்தனைப் போக்கை நம்பி தொடர்ந்து அதைத்தேடுபவர்கள், அதற்கான தரவுகளைத் தேடி அது எவ்வளவு உன்னதமானது எனச் சொல்பவர்கள் ஒரு ரகம். அது குறித்து விமர்சனங்களை எதிர்கொண்டு தான் ஏற்ற , நம்பும் அதற்காக கடுமையான எதிர்வினையாற்றுபவர்கள். தான் நம்பிய ஒன்றை absolute என்கிற புரிதலில் செயல்படுபவர்கள்.

மற்றொரு ரகம் தொடர்ந்து கற்றல் வழியாக இது சரியாக இருக்கிறதே என மனதளவிலும் புத்தியிலும் அதை பார்ப்பவர்கள். இரட்டை நிலைப்பாடு இல்லாமல் இருக்கிறதா என்கிற புரிதலை தேடுபவர்கள். ஒன்றை குறித்து அறிந்து கொள்வதே ‘ தீட்டுப்பட்டுவிடும்’ எனக் கருதாதவர்கள். ஒன்றை அறிந்துகொள்வதற்கான உழைப்பை கொடுக்காமல் அது குறித்த bias வேண்டாமே என பழக்கப்படுத்திக்கொள்பவர்கள். ஆதாரங்களை தேடாமல், கேள்விப் படுவதையெல்லாம் வைத்துக்கொண்டு கருத்தை உருவாக்கிக் கொள்ளாதவர்கள்.

என் சொந்த வாழ்வில் கற்றல் முறையில் இந்த இரண்டு ரக சாயலும் என்னிடம் இருந்ததை உணரமுடிந்தது. இளைஞனாக மார்க்சியம் மிகச் சரியானது என்கிற நம்பிக்கையுடன், கையில் கிடைத்தவற்றை புரிந்தும் புரியாமலும் படித்தல், வெளிச் சொல்லுதல், ஏன் பிறருக்கு வகுப்பு எடுத்தல் கூட நடந்திருக்கிறது. மார்க்சியம் குறித்து விமர்சிப்பவர்களை அரைவேக்காடுகள் என கடுமையாக சாடியது உண்டு. தோழர் கோவை ஞானி போன்றவர்களிடம் கூட கம்யூனிஸ்ட் கட்சி இதழ்களை வாசிக்காமலேயே அவர்களை விமர்சனம் செய்வது நேர்மையா என சண்டையிட்டதுண்டு. அவரின் மார்க்சிய புரிதல் குறித்து தனிக் கட்டுரை எழுதியதுண்டு.

சிபிஅய் சிபிஎம் சிபிஎம் எல் என தோழர்களாக நாள்முழுதும் அமர்ந்து , ஆவணங்களுடன் காரசாரமாக எங்கள் லைனே சரி என மோதிக்கொண்டதுண்டு. கூட்டங்களில் டாங்கேவை, எங்கெல்சை குறைசொன்னார்கள் என சில மார்க்சிய பேராசிரியர்களிடம் மரியாதை குறைவாக நடந்துகொண்டதுண்டு. கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் ஆவணங்கள் குறித்தும், கட்சி திட்டங்கள் குறித்தும் அதிகப்பிரசங்கி எனக் கருதிக்கொள்ளாமல் தோழர் பிரகாஷ் காரத் அவர்களுக்கும் கூட எதிர்வினையாற்றியதுண்டு. சமீபத்தில் கூட தா. பாண்டியன் எழுதிய பொதுவுடைமையாளர் வருங்காலம் என்கிற புத்தகத்தில் காணப்படும் factual errors குறித்து எழுதியதும் உண்டு. இந்தப் போக்கின் சாயல் சற்று நீர்த்துப் போகத்துவங்கியுள்ளது என இப்பொதெல்லாம் உணரமுடிகிறது.

காந்தியுடன் போகத்துவங்கியதில் குட்டி குட்டி transformational moments என்பதை உணரமுடிந்தது. காந்தியை நம்பி நான் அவரிடம் போக ஆரம்பிக்கவில்லை. அவரை விமர்சிக்கவேண்டும் என உள் நுழையவில்லை. எப்படி நிகழ்ந்தது எனத்தெரியவில்லை, திறந்த மனதுடன் என் baggage எல்லாம் வைத்துவிட்டு சென்றதாகவே எனக்குப்படுகிறது.

நான் காந்தியிடம் போவதற்கு முன்பாகவே மார்க்ஸ் உடன் அவ்வப்போது பெரியார், அம்பேத்கர் எனச் சென்றதுண்டு. மார்க்ஸ் அம்பேத்கர் பெரியார் எல்லோருமே அப்போதைய என் உரிமை சார் கண்ணோட்டத்திற்கு பெரும் கருவிகளாக இருந்தனர் . கடமையை அருமையாக செய்த பல தோழர்கள் அப்போதும் என்னருகில் இருந்துள்ளனர். நான் சரியாக உணரவில்லை.

காந்தி என்னிடம் பல கேள்விகளை எழுப்பியவர். இரட்டை நிலைப்பாடு குறித்து கண்ணாடி காட்டியவர். நானே என் இசமே எப்போதும் சரி என்கிற உரிமை கோரல் குறித்து சிந்திக்க வேண்டியவர். One step at a time - find light in darkness என்கிற தோழர் குப்தாவின் குரலை காந்தி இன்னும் விரிவாக செவிமடுக்க வைத்தார். Exemplariness என்பதின் ஆழத்தை காந்தி உணர்த்திக்கொண்டேயிருக்கிறார். மணிக்கணக்காக பேசிவிட்டு பேசிய எதையும் தீர்க்க வேண்டிய பொறுப்பேற்காத அரசியல் முறை குறித்து அவர் என்னிடம் கேள்வி எழுப்பலானார். உள் மனதின் நேர்மை என்ற ஒன்றை அறிவாயா என தொந்தரவு செய்யலானார்.

எது குறித்தும் பிறர் சொல்வதை செய்வதை தோண்டிக்கொண்டு வசைபாடிக்கொண்டேயிருப்பதில் சுகமா , அல்லது சமூகத்தின் சக மனிதனாக தான் என்னவெல்லாம் செய்யவியலும் என்பதில் கவனக்குவிப்பா என்கிற கேள்வியையும் அவர் எழுப்பிக்கொண்டேயிருக்கிறார். எப்போதும் பிறர் குறித்த விமர்சனம்- ஏதாவது ஒரு ஆளுமை அல்லது இசம் கோட்பாடு குறித்து விமர்சனம் என்பதை முதன்மையாக்காமல், தன் அறிதல் முறை தன் செயல்பாடு குறித்த நேர்மையான மதிப்பிடல்களை turning the search light inwards என்பதை காந்தி முன்வைக்கிறார்.

மார்க்சியம் குறித்து வரும் விமர்சனங்களில் என்னாலும் ஏற்கத் தகுந்தது இருந்தால் எடுத்துக்கொள்வது- இல்லையெனில் அவற்றை கடந்து செல்வது என்ற எண்ணம்தான் இப்போதெல்லாம் வருகிறது. மார்க்சியத்தை விமர்சிப்பவர்கள் அவர்களுக்கான வாசிப்பு புரிதல் நேர்மை அவர்களது பிரச்சனையும் கூட என்ற எண்ணமும் கூடியுள்ளது. அவரவர் மனமே நீதிக்கூடம்.

காந்தி பற்றியும் அப்படித்தான் கருதுகிறேன். காந்தி குறித்து பொதுப் புத்தியில் மேலான மரியாதை மதிப்பீடுகள் இருப்பது போலவே, அவர் குறித்து கடுமையான விமர்சனங்களும் இருக்கின்றன. அவரவர் நேர்மையில் வாசிப்பு உழைப்பில் அதை கண்டடைந்தால் மகிழ்ச்சி. கேள்வி ஞானத்தில் , தான் நேரிடையாக காந்தி குறித்த வாசிப்பின்மையில் விமர்சனம் செய்வது நியாயமா என்பதை அவரவர் மனதில் நேர்மையாக எடைப்போட்டுக்கொள்வது நலம். Gandhi is still a best defender of himself என்கிற புரிதல் என்னிடம் ஆழமாக உள்ளது. ஆனால் அதற்கு ஒருவர் அவரிடம் போகவேண்டும் என்கிற நேர்மையை கொண்டிருக்கவேண்டும்.

காந்தி சொல்வது போல் ஒருவர் நம்மிடம் முன்வைக்கும் எக்கருத்தையும் நாம் மறுப்பதற்குரிய உண்மையை உணரும்வரை, அவர் சொல்வதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எதைக் கண்டும் பிரமிப்பு அடைந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவதும், உதாசீனமாக்கி மிதிப்பதும் அவசியமா என்கிற உணர்வும் பற்றாமல் இல்லை. அறிதல் தோறும் அறியாமையை கண்டடைகிறோம் என்கிற எண்ணமும் கூடவே வந்துகொண்டிருக்கிறது.

மே 5

கார்ல் மார்க்ஸ் உடன் கடந்த 45 ஆண்டுகளாக ஏதோ ஒருவகையில் எனது பயணம் நடந்திருக்கிறது. புத்தகங்கள், சர்வதேச இதழ்கள், இந்திய இதழ்கள், மாநில பத்திரிகைகள், மார்க்சியர் உரைகள் என இந்தப் பயணம் என்னை அழைத்துச் சென்றுள்ளது.

இடைவெளியே இல்லாமல் இது நடந்துவிட்டது எனச் சொல்லமுடியாது. அவ்வப்போது இடைவெளிகள்..ஆனால் அவை சில நாட்கள், சில வாரங்கள் என்ற அளவிலேயே இருந்திருக்கும். மாதக்கணக்கில் மார்க்சிடம் செல்லவில்லை என்ற நிலை இருந்திருக்காது. ஏதோ ஒரு article *என்றாவது தொடர்பு இருந்திருக்கும்.*

ஏராள பக்கங்கள் (Marx corpus *எனப்பார்க்கும்போது மிகக்குறைவான) அவ்வப்போது இந்த ஆண்டுகளில் என் கண் வழி மிதந்திருக்கும். புரிந்தும் புரியாமலும் வரிகளை விழிகள் நகர்த்திருக்கும். சில நேரங்களில் உச்ச* concentration *உடனும் பல நேரங்களில் எண்ண அலை பாய்தல் கணங்களாகவும் அவை கடந்து போயிருக்கும். படித்தவை பல நினைவில் நீங்காமல் அமரவில்லை. சில புத்தகங்கள் திரும்ப படிக்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கும். படிக்கவும் வாய்ப்பு இருந்திருக்கும்.*

கீழ்கண்ட சில புத்தகங்கள் மார்க்ஸ் குறித்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் மதிப்பீட்டிற்கு அப்பாற்பட்டு, அவர்களின் ஆய்வுப்புரிதலில் வந்தவையாக எனக்குத் தோன்றும். அங்கு வெறும் ஆராதனைகள் எனும் hagiography *முறை இருக்காது. அவரின் பெருமிதங்கள் , சிந்தனை உயர்வு குறித்த கேலி பேச்சுக்கள் இருக்காது. அந்த அந்த ஆசிரியர் உணரும் குறைகள் சில சொல்லப்பட்டிருக்கும். அப்படியான நான் வாசித்த சில புத்தகங்களை இங்கு தந்துள்ளேன். மார்க்சை முன்முடிவின்றி நேர்மையாக புரிந்துகொள்ள விழையும் எவருக்கும் உதவக்கூடும் எனக் கருதுகிறேன். இந்த புத்தகங்கள் கடந்த 110 ஆண்டுகள் இடைவெளியில், இக்காலம் வரை வந்தவை. புதிய புதிய தகவல்களுடன் பெரும் உழைப்பை நல்கி வந்தவையாக எனக்குப்படுகின்ற புத்தகங்கள் இவை.*

Frans Mehring - The story of Karl Marx (1914*ல் எழுதப்பட்டது*)

Otto Rhule - Karl Marx his life and works

David Riazanov- Marx Engels An Introduction

Isaiah Berlin - Karl Marx

Max Beer- Karl Marx

Peter Worsely- Marx and Marxism (*பிரமிள் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளது*)

Peter Singer- Marx A very short introduction

Harold Laski - Karl Marx an essay

David McClellan- Karl Marx His Life

Francis Wheen - Karl Marx

Gregory claeys- Marx and Marxism

Jonathan Spencer- Karl Marx A Nineteenth century life

Meghnad Desai- Marx’s Revenge

Gareth Stedman Jones- Karl Marx Greatness and Illusion (2017ல் வந்தது)

சாமிநாத சர்மா - கார்ல் மார்க்ஸ் (பெர்லின் மற்றும் ஹரால்ட் லாஸ்கி தழுவல் எனலாம்)

மே 8

Lord Samuel இங்கிலாந்தின் லிபரல் கட்சித் தலைவராக இருந்தவர். முன்னர் ராம்சே பிரதமர் காலத்து உள்துறை அமைச்சராக இருந்தவர். 1943 காந்தியின் உண்ணாவிரதம் தொடர்பாக வைஸ்ராய்க்கும், காந்திக்கும் வலுவான இரு பக்க வாத பிரதிவாதங்கள் நடந்தன. மக்கள் அவையில் காந்தி குறித்த தவறான குற்றச்சாட்டுக்களை சிலர் வைத்தனர். அது குறித்து சாமுவேல் அவர்களுக்கு காந்தி மே 15, 1943ல் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் தத்துவ மனம், லிபரல் மனம், டோடலிட்டேரியன் போன்ற பதங்களுக்கு எளிய விளக்கம் ஒன்றை காந்தி தந்திருப்பார். சில வரிகள் தான் அவை. அதை இங்கு தந்துள்ளேன்.

You (Lord Samuel) are a philosopher and a liberal . A philosophic mind has always meant for me a detached mind, and liberalism a sympathetic understanding of men and things

Totalitarian according to pocket Oxford dictionary means ‘a designating a party that permits no rival loyalties or parties. Totalitarian state means with only one governing party. It must have violence for its sanction for keeping control

Inputs vol 6 Mahatma by D G Tendulkar

மே 8

அம்பேத்கர் வாசிப்பு முறை

Scott Stroud *அவர்களின் அம்பேத்கர்* pragmatism *ஆய்வு குறித்து இடுகைகள் செய்திருந்தேன்.*

அம்பேத்கர் சவுத்பாரோ கமிட்டிக்கு கொடுத்த குறிப்புகளில் ஜான் டூயி அவர்களின் செல்வாக்கு எப்படி காணப்பட்டது என்பதை ஸ்காட் விரிவாக தந்திருப்பார்.

நான்காவது சாப்டரில் ஸ்காட் 'Pragmatism Reflection and the Annihilation of caste *குறித்து விவாதிக்கிறார். பலரும் அறிந்திருக்கக்கூடிய 'அம்பேத்கர் வாசிப்பு முறை ' என்கிற செய்தி குறித்து சற்று கூடுதலாக ஸ்காட் இதில் பேசுகிறார்.*

அம்பேத்கர் நூலகத்தில் இருந்த புத்தகங்களின் கணக்கு குறித்து நான் பார்த்த அளவில் 30 *ஆயிரம்-* 40 *ஆயிரம் என்கிற தகவல்கள் இருந்தன. ஸ்காட்* 50 *ஆயிரம் என்கிறார். அவ்வளவு புத்தகங்களையும் கனவாக வாங்கி வாங்கி சேகரித்திருந்தாலும், அம்பேத்கருக்கு வாழ்நாள் அவ்வளவு புத்தகங்களையும் படித்திருக்க அனுமதித்திருக்காது . அவர் எப்படி வாசித்திருக்கிறார் என்பதை , அவரையும் காந்தியையும் மதித்த தாக்கர் கம்பனி புத்தக நிறுவனம் சார்ந்த* u R Rao *அவர்களிடம் அம்பேத்கர் சொல்லியிருப்பார். அம்பேத்கர் வாசிப்புடையவர் எவரும் இதை அறிந்திருக்கக்கூடும். இந்தப் பகுதியை ஸ்காட் வரிகளுடன் சேர்த்துப் பார்ப்போம்.*

" Ambedkar's reading habits were very finely honed and selective. He rarely read an entire book to simply hear its author out. He engaged texts and ideas like a pragmatist, with a purpose and with forethought as to how they might be usable in his own endeavours or struggles.

If a book did not look worth his time , or of reading it in its entirety offered diminishing intellectual returns compared to the time he would have to invest , Ambedkar was not afraid to cut his losses..

He once told to U R Rao that 'reading an entire book is

Seldom my style of my reading. There are only a few books which call for a deep study, from cover to cover. When I see a new title on a subject I am interested in, say socialism, I glance through the blurb, the introduction, the contents, decide which chapters would probably offer me some new thoughts and ideas on the subject. And then I read only those pages, for the rest is familiar ground. And when I have done that, you may say I have read that book"

அம்பேத்கர் வாசித்தாரா என்பதற்கு அடையாளமாக அப்புத்தகத்தில் கலர் கலரான பென்சில் மார்க்குகள் இருக்கும். சித்தார்த் கல்லூரியில், புனே சிம்பியாசிஸ், அவுரங்கபாத் மிலிந்த் கல்லூரி, மும்பாய் ராஜ்கிரகம் என பல இடங்களில் பிரிந்து கிடைக்கும் அம்பேத்கர் நூலக புத்தகங்களை பார்வையிட்ட ஸ்காட் சொல்கிறார்-

அப்படி மார்க் இடுவது மூலம் அந்த மூல ஆசிரியருடன் அவர் 'டயலாக்' மேற்கொள்கிறார். ஓரிரு சாப்டர்களுடன் பல புத்தகங்களில் இந்த மார்க் நின்று போகும். பல புத்தகங்களில் எந்த

குறித்தலும் இல்லை. சில புத்தகங்களில் மார்க் முழுமையாக இருக்கும். அவர் gray, blue, red pencils மூலம் செய்திருக்கிறார்.

சித்தார்த் கல்லூரியில் டூயின் Democracy and Education மூன்று காப்பிகள் கிடைத்தன. இரண்டில் முழுமையாக அவர் மார்க்கிங் செய்திருக்கிறார். அதேபோல் அவர் பயன்படுத்திக்கொண்ட வேறு ஒரு புத்தகமான Ethics by Tufts and Dewey என்பதிலும் முழுமையாக அம்பேத்கரின் மார்க்கிங் இருந்ததை ஸ்காட் சொல்கிறார்.

அப்படி பென்சில் குறியிட்ட பகுதிகளில் சிலவற்றையும் தனது பேச்சு எழுத்துக்களில் எடுத்தாண்டும் இருக்கிறார் அம்பேத்கர். அப்படி அம்பேத்கரால் பேசப்பட்டு புகழ் வாய்ந்த மேற்கோளாக காட்டப்படும் வரி 'ஜனநாயகம் ' என்பது அரசாங்கத்தையும் தாண்டிய ஒன்று- அது அடிப்படையில் 'a mode of associated thinking' என்பதாகும்.

Dewey எழுதிய democracy and education ல் பக் 93 ல் காணப்படும் வரிகளை ஸ்காட் தருகிறார்.

A democracy is more than a form of government, it is primarily a mode of associated living, of conjoint communicated experience

அம்பேத்கர் தனது வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலி உரையில் மே 1956 லும் இவ்வரிகளை பயன்படுத்தியதை ஸ்காட் சொல்கிறார்.

அம்பேத்கரின் இந்த தேர்ந்த வாசிப்பனுபவத்துடன், வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்கள் ஒத்துப் பார்த்து தேவையானவற்றை எடுத்துக்கொள்ள முடியும்.

ஸ்காட் புத்தகம் படிக்க வேண்டிய ஒன்று ..வாய்ப்புள்ளவர் முயற்சிக்கலாம்.

மே 9

“ We are not bricks or stones. We have feelings and ambitions and national pride. We have suffered all sorts of tyranny, exploitation, insult and injury. You have trampled on our national honour and dignity and also heaped outrageous insults on us, added grave injuries, economic and political..we do not want any patronage. We want social emancipation, economic emancipation and political emancipation “

M C Rajah The oppressed Hindus 1925

“Nation building will be all tall talk if the activities are not directed towards the uplift of these waiting millions, the real sons of the soil “

M C Rajah 4th March 1927 central Assembly Debate

As quoted by Swaraj Basu in An Unforgettable Dalit Voice

may 9

கற்றது குற்றமா வ ரா

சராசரி மனிதன் உயர்ந்தவன் தான். எல்லாக் குணங்களும் பிரியப்படத்தக்க அளவில் அவனிடமிருக்கும். அவன் எல்லோருக்கும் நண்பன். எல்லோருடைய தன்மைகளும் இவனிடத்தில் இருப்பதால் இவனைக்கண்டால் பிரியமும் நம்பிக்கையும் ஏற்படுகிறது. பெரிய மனிதர்களைக் கண்டால் பக்தியும் பயமும் தான் ஏற்படும்.

ஆசையும் மரணமும் ஒளிந்து கொண்டுதான் மனிதனோடு போராடுகின்றன. மனிதத்தனமாய் நேரே நின்று சண்டை செய்யும் ஆற்றல் அவைகளுக்கு கிடையாது. ஒளிந்து பிடிக்கும் விளையாட்டில், அவைகள் கைதேர்ந்தவை. ஆசையை பூர்த்திசெய்துகொள்ளவேண்டும், அல்லது வைராக்கியத்தால் அதை அடித்துத் துரத்திவிடவேண்டும். இல்லாவிடில் ஆசை ஒழியாது. வெற்றியிலே, காரியத்திலே கலந்து ஆசை, உருமாறிப்போனால் ஒழிய அது ஆசையாக மனித உள்ளத்தில் குடியிருந்துகொண்டு அவனை கொன்று தின்றுவரும். ஆசை மனிதனை பொம்மையாக ஆட்டிவைக்கிறது. ஆசைதான் மனிதன் என்றும் சொல்லிவிடலாம்.

1944 *ல் எழுதப்பட்ட வரிகள்- சிறை வாழ்க்கை ஓட்டத்தில்*

may9

இந்து தமிழ் திசை கொண்டு வந்துள்ள என்றும் தமிழர் தலைவர் பெரியார் குறித்து முன்னொரு இடுகை செய்திருந்தேன். 800 பக்கங்களுக்கும் மேலான நல்ல தொகுப்பு.

பெரியாரின் அயரா உழைப்பை, சிந்தனை செல்திசையை, இயக்க பரிமாணங்களை கட்டுரையாளர்கள் பல கோணங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். பெரியார் குறித்த hagiography என இந்நூலை தள்ளிவிடமுடியாது என்றாலும், அவர் குறித்த ஆய்விற்கு முழுமையாக துணை செய்யும் நூல் எனவும் சொல்லிவிடமுடியாது.

காந்தி என்றால் அவரது critics எல்லோரையும் equal terms ல் வைத்து பார்க்கும் சிந்தனை உலகு. மார்க்ஸ் குறித்தும் ஆதரவாக எவ்வளவு ஆய்வுகள் உண்டோ, அவ்வளவு விமர்சன ஆய்வுகளும் உண்டு. இந்த அளவு ஆய்வுப் பரப்பை கொண்ட அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் அவர்களது கொள்கைகளை இயக்க செயல்பாடுகளை, tactics களை விதந்தோதும் ஆய்வுகள் அளவிற்கு, அவர்கள் குறித்த விமர்சன ஆய்வுப்புள்ளிகள் இன்னும் வரவில்லை. அவர்கள் absolute -விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் , போதாமை ஏதும் இல்லாதவர்கள் , முழு நிறை ஆளுமைகள் என முடிவெடுத்துவிட்டால் , அங்கு எதிர்பார்க்க ஏதும் இல்லை.

அவர்களின் வாழ்க்கை தொடர்ச்சிகள் ஆங்காங்கே அறுபட்டது போன்ற உணர்வே என் வாசிப்பில் கிடைக்கிறது. காந்தி கஸ்தூரர் வாழ்க்கையை பற்றிய வாசிப்பை போல் , அம்பேத்கர் ரமாபாய்- அம்பேத்கர்- சவீதா வாசிப்போ, பெரியார் நாகம்மை, பெரியார்- மணியம்மை வாசிப்பு கிடைப்பதில்லை. சக தோழர்களுடன் அவர்களின் உறவியல் , உளவியல் உரையாடல்களும், காந்திக்கு கிடைப்பது போல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றே தோன்றுகிறது.

பெரியார் அண்ணா உறவு- விரிசல்- உறவு என்பதற்கான முழுமையான ஆய்வு இருக்கிறதா எனத் தெரியவில்லை. திமுகவின் உதயம் அதன் தொடர் இருப்பு , தனிக் கட்சி என்கிற வகையில் அதன் தாய் கட்சியிலிருந்து எந்த எந்த புள்ளிகளில் (தேர்தல் பங்கேற்பு என்கிற மிக முக்கிய புள்ளியைத் தாண்டி) வேறுபட்டு தனது தனித்தன்மையை கொண்டிருக்கிறது என்கிற ஆய்வுக்கோணம் விவாதமாகியிருக்கிறதா?

மார்க்சியர்கள் , லெனின் சோவியத் சோதனையைத் தொடர்ந்து மார்க்சியம் என்பதுடன் லெனினியம் என்கிற பின்னொட்டை சேர்த்தார்கள். சோவியத் வீழ்ச்சிக்கு பின்னர் அது மார்க்சியத்தின் தோல்வியல்ல, சோசலிச நிர்மாண மாடல் ஒன்றின் தோல்வி என்கிற புரிதலுக்கு வந்தனர். சீனா தன் பங்கிற்கான பின்னொட்டை மார்க்சியம்- லெனினியம்- மாவோவியம் என்று சொன்னது. ஊர் அடையாளம் ஒன்று மக்களை நெருங்க தேவைப்படுகிறது என நாம் உய்த்து உணரலாம்.

இந்நூலில் கூட அண்ணாவை லெனினுடன் ஒப்பிட்டார் பெரியார் என்பது பேசப்பட்டுள்ளது. திமுக தனது கொள்கை கோட்பாடுகளில் அண்ணாவை முன்வைத்து துவங்கப்பட்டது. 1949-67 கால திக பெரியார் மற்றும் திக தலைவர்களின் எழுத்துக்கள், திமுக அண்ணா மற்றும் அதன் தலைவர்கள் எழுத்துக்கள் மூடப்பட்டு கடந்து போகப்படுகிறது. அதேபோல் பெரியார் காலத்தில் அவருடன் உறவாடி நல் தோழர்களாகி வேறுபட்டு போன சிங்காரவேலர், ஜீவா, அண்ணா, பாரதிதாசன், கி ஆ பெ, குத்தூசி என பலரின் வேறுபட்ட நிலைப்பாடுகள் ஏன் எங்கு எதனால் , பெரியார் எதிர்வினைகள் என்ன என்பன போதுமான விவாதப் பொருளாகவில்லை. நூற்றாண்டு

கால இந்திய மார்க்சியம், காங்கிரஸ் இயக்கம், ஆர் எஸ் எஸ் என்பது போலவே நீதிக் கட்சி- சுயமரியாதை இயக்கம்- திக - திமுக இன்னும் பிற என்கிற நூற்றாண்டு மரபு இருக்கிறது. இந்த தொடர்ச்சிக்குள் நடந்த விவாதங்கள் மாறுபாடுகளை அறிதல் புரிதலை மேம்படுத்தும்.

மார்க்சிடமிருந்து எதிர்த்துக்கொண்டு லெனின் என்கிற நிலை ஏற்படவில்லை. எனவே அங்கு மார்க்சுடன் லெனின் என்கிற நிலைப்பாடு உருவானது. ஸ்டாலின் வேண்டாம் என்ற நிலைப்பாட்டை தன் இறுதி நாட்களில் லெனின் எடுத்தும், சோவியத்தில் ஸ்டாலின் வளர்ச்சியை எவராலும் தடுக்கமுடியவில்லை. லெனினிய ஆட்சி என்ற பெயரில் ஸ்டாலின் ஆட்சியை விதந்தோதியவர்களும் உண்டு. கடுமையாக விமர்சிக்கும் மார்க்சியர்களும் உண்டு.

இங்கும் அண்ணா வேண்டாம் என்ற நிலைப்பாட்டை பெரியார் எடுத்தும் அண்ணாவின் வளர்ச்சியை அவரால் தடுக்க முடியவில்லை. அண்ணா தன் பெரியார் புறக்கணிப்பு அரசியலை செய்யாமல் matured ஆக நடந்து அரசாங்கத்தை பெரியாருக்கு காணிக்கையாக்கி உறவை சீர் செய்திட முன்கையெடுத்தார். அடுத்து 7 ஆண்டுகள் மட்டுமே பெரியார் திமுகவிற்கு முழு ஆதரவை தர வாழ்நாள் அனுமதித்தது. காமராஜருக்கு 10 ஆண்டுகள் ஆதரவு தந்திருந்தாலும் அது பெரியாரின் தனித் தோழமையாக முடிந்ததே தவிர , திக காங்கிரஸ் உறவாக மலரவில்லை. மலரவும் வாய்ப்பில்லை.

பெரியார் அண்ணா கருணாநிதி,ஸ்டாலின் என்கிற தொடர்ச்சிக்கும் , பெரியார் அண்ணா கருணாநிதி , எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி என்கிற கிளை பிரிந்த தொடர்ச்சிக்கும் உள்ள ஒற்றுமை வேறுபாடுகள் இன்னும் விரிவான ஆய்வுகளாக கிடைக்கப்பெறவேண்டும்.

திராவிடத்தின் மீது ஆழ்ந்த பற்று கொண்டவர்களிடமிருந்து , எந்த பக்கங்களும் மூடப்படாமல், ஆய்வுகளின் மேசைக்கு வைக்கப்படுதல் அவசியமாகிறது.

ஆய்வும் விரிவும் என்கிற தலைப்பில் இந்து தமிழ் திசை பேச முற்பட்டிருந்தாலும், மேற்கூறிய இடைவெளிகளை இந்நூலில் என்னால் உணரமுடிகிறது. பார்க்கலாம் ஆய்வுலகம் எப்படி அழைத்துச் செல்கிறது என்று…

may 10

இயக்கங்களும் தந்தைமார்களும்

தேசங்களும் மக்களும் தங்களுக்கான தந்தையை பொது புத்தி வழி கண்டறிய முயல்வார்கள். அப்படியொருவர் குறிப்பிட்ட முக்கிய சூழலில் அவர்களுக்கான தந்தை பாத்திரத்தை நிரப்பக்கூடியவராக இருப்பார். அவர்கள் சம கால மனிதர்களின் ஊடே , அவர்கள் சற்று தனித்துவம் கூடி மிளிரக்கூடியவராக இருந்திருப்பர். அல்லது அந்த சூழல் அவரை அப்படி ஆக்கியிருக்கலாம். அப்படியாகிறவர் மூலவராக, பிதாமகனாக, முதல் மரியாதைக்குரியவராக அந்த குறிப்பிட்ட space *தனில் அறியப்படுவார். அவர் மீது அங்கு எதிர்ப்புணர்வோ, விமர்சனமோ இருக்காது என்று பொருளில்லை. அதையெல்லாம் விஞ்சி அவர் பெறும் மக்கள் ஆதரவால், அவரின் சிறப்பு குண விசேடங்களால் தியாகத்தால் அந்த தந்தை ஸ்தானம் அவருக்கு அமையக்கூடும். பிரிந்து செல்பவர்கள் கூட தங்களுக்கான தந்தையார் ஒருவரை கண்டறிவர். இயக்கங்களுக்கு கொடி கொள்கை போல தந்தை என்பதும் முக்கிய அடையாளமாகிறது. மனிதர்களுக்கு இது ஒருவகை தொன்ம முடிச்சு. தொன்மம் தோய்தல்.*

சர்வதேசம் பேசக்கூடியவர்களுக்கு இயல்பாக மார்க்ஸ் மூலவராகிறார். கம்யூனிச இயக்கத்தின் உலக தந்தையாக அவர் பாவிக்கப்படுவார். சோவியத் அனுபவம் அங்கு லெனினை தந்தையாக்கினால், சீனா மாவோவை, வியத்நாம் ஹோசிமின்னை, கியுபா காஸ்ட் ரோவை தந்தையாக்கிக்கொண்டனர்.

இந்தியாவும் தன் விடுதலைக்கால அனுபவத்தில், காந்தியின் தனித்தன்மை தியாக வாழ்க்கை உணர்ந்து அவரை தேசத்தந்தையாக்கியது. அம்பேத்கரின் அர்ப்பணிப்பு அயரா உழைப்பு அவரை அரசியலமைப்பு தந்தையாக்கியது. பெரியாரின் உழைப்பும் சுயமரியாதை போராட்டமும் தமிழக தந்தை ஸ்தானத்தை அவருக்கு வழங்கியது. இதன் பொருள் எல்லோரும் அப்படியே ஏற்றுக்கொண்டனர் என்பதல்ல. எவராலும் தவிர்க்கமுடியா உயர் அந்தஸ்து அவர்களுக்கு கிடைத்தது என புரிந்துகொள்ளலாம். மக்களின் ஏற்புதான் இந்த பிதாமகன் அந்தஸ்தை அவர்களுக்கு தந்தது.

தேசம் மாநிலம் என்பதுடன் இந்த பிதாமகன் தேடல்கள் நிற்பதில்லை. ஊர், வட்டாரம், இயக்கம் என ஆங்காங்கு தந்தையர் உருவாக்கம் நடைபெறும்.

என் போன்றவர்கள் வளர்ந்த டெலிகாம் இயக்கத்திலும் எங்கள் பிதாமகனாக தோழர் ஓம் பிரகாஷ் குப்தா உயர் ஸ்தானம் பெற்றார். அவரின் அயரா உழைப்பு , 'கமிட்மெண்ட்' , மேதமை, தோழர்களுடன் தொய்விலா நேசம், தன்னை வருத்திக்கொண்டு ஆயிரக்கணக்கானவர் வாழ்வில் முன்னேற்றம் கொணர்ந்த பண்பு, தீர்வை நோக்கிய போராட்ட வாழ்வு அவருக்கு இயக்க தந்தைக்கான இடத்தைக் கொடுத்தது. அவரும் வாழ்நாளில் ஏராள எதிர்ப்புகளை சந்தித்தார். சிலநேரம் இயக்கங்கள் தான் போற்றிய தந்தையை தனிமையாக்கிவிடும். காந்திக்கு நேர்ந்தது. தோழர் குப்தாவிற்கும் நேர்ந்தது. பிதாமகனாக அறியப்பட்ட தோழர் டாங்கேவிற்கும் நேர்ந்தது.

தந்தை ஸ்தானம் என்பதில் எதிர் நின்று தனி பீடம் அமைத்து அங்கு பிதாமகன் ஆவது என்பது ஒருவகை என்றால், தான் வாழும் தன் செல்வாக்கு மண்டலப்பகுதியில் 'தந்தையானவர்' பெயர் ஒட்டை பெற்று அப்பகுதிக்கு 'அவராதல்' என்கிற இடத்தை பெறக்கூடியவர்களும்

உண்டு. உதாரணமாக ‘ இந்நாட்டு இங்கர்சால்’ , ‘தென்னாட்டு காந்தி’ என்கிற ஒட்டுக்களை பெறக்கூடியவர்களும் உண்டு. இல்லையெனில் அவரின் ‘இளைய ‘ இவர் என்ற ஸ்தானம் பெறுவோரும் உண்டு. சூரியனுக்கு சந்திரன் போன்றவர்கள் இவர்கள் என எளிமையாக எடுத்துக்கொள்ளலாம். அப்படியொரு இடத்திற்கு தகுதியானவர் என உயர்த்தும்போது, முன்னரே அந்த இடம் நிரப்பப்பட்டதால், இவர்களை அந்த முன்னவர் சாயலுக்கு எடுத்து உயர்த்துதல் என்பது இயக்கங்களில் விழிப்புடன் சிலரால் செய்யப்படும்.

தற்போது டெலிகாம் ‘பென்சனர் ‘ இயக்கமும் தன் தந்தையை தேடும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. கொஞ்சம் கொஞ்சமாக வழிபாட்டு பொருட்களை சேர்க்க துவங்கியுள்ளது. இதில் பணிபுரிய வந்தவர்களுக்கு ஏற்கனவேயே அவர்களின் ‘தாய் இயக்க தந்தையிருப்பதால்’ , அவரைப்போல இவர் என வர்ணிப்புகள் நடைபெறவேண்டும். தீவிர விசுவாசிகள் அல்லது புதிய விசுவாசிகள் ‘அந்த தந்தையெல்லாம் பழசு’ , இனி ‘இவர்தான் புதிய தந்தை ‘ எனச் சொல்ல முற்படுவர். எப்படியும் இந்த இயக்கமும் தந்தையை அமர்த்தாமல் ஓயாது என்றே தோன்றுகிறது.

10-5-2024

May 11

வாசிப்பவர் தான் வசியப்படும் வரிகளையோ, கருத்தாங்களையோ உள்வாங்கி பொருத்தமான இடங்களில், சாதகமாக வெளிப்படுத்த பொதுவாக முயற்சிப்பார்கள்.

ஹெகல், பாயர்பாக் , பிரஞ்சு சோசலிஸ்ட்கள், இங்கிலாந்து பொருளாதாரவாதிகள் உள்ளிட்டவர்களை உள்வாங்கி மார்க்ஸ் ஒட்டியும் வெட்டியும் எழுதியதானாலும், மண்ணுக்கேற்ற மார்க்சியம் என நாம் சொல்வதாக இருந்தாலும், இந்திய ஞான மற்றும் மேற்கு சிந்தனையிலிருந்து காந்தி எடுத்து வயப்படுத்தியதாக இருந்தாலும், மண்டேலா- மார்ட்டின் லூதர் கிங் பேசிய காந்தி அகிம்சையாக இருந்தாலும் இப்படி ஒருவகை எடுத்தாளும் வகைப்பட்டதுதான். இதை Appropriation and Reconstruction *என விரிவாக அம்பேத்கரை முன்வைத்து ஸ்காட் ஸ்ட் ரவுட் பேசியிருப்பார்.*

சவுத்பாரோ கமிட்டி அறிக்கை எழுதிட ஜான் டூயி மற்றும் ரஸ்ஸல் ஆக்கங்கள் அம்பேத்கருக்கு எவ்வகையில் உதவின என்பது குறித்து முன்னர் சில இடுகைகள் செய்திருந்தேன். அதேபோல் அம்பேத்கரியர்கள் அதிகம் பயன்படுத்தும் கற்பி ஒன்றுசேர் போராடு என்பது இங்கிலாந்து பாபியன் சோசலிஸ்ட்கள் அதிகம் பயன்படுத்திய முழக்கம்.

ஸ்காட் தனது அம்பேத்கர் நூலான The Evolution of Pragmatism in India *வில் , அம்பேத்கரின் புகழ் வாய்ந்த* Annihilation of Caste *என்கிற நூலுக்கு டூயியும் , டப்ட்டும் எப்படி உதவியுள்ளார்கள் என்பதை விரிவாக விளக்கியுள்ளார். அவர்கள் எழுதிய* Ethics *நூலின் கருத்தாங்களை, இந்திய தேவைக்கேற்ப அம்பேத்கர் 'மண்ணுக்கேற்ற டூயியம்' ஆக மாற்றிக்கொண்டார் என்பதை அறியமுடிகிறது.*

இந்து மதத்தை religion of rules - *புத்தம்* religion of principles *என்கிற பார்வையை அம்பேத்கர் வைத்து எழுதுவார். இந்த* principles- rules *என்பதற்கான வரையறைகளை அவர் டூயி மற்றும் டப்ட்டிடமிருந்து எடுத்தாண்டிருப்பார்.*

மாதிரிக்காக ஒரு பாராவை ஒப்பிட்டு காட்டலாம். அம்பேத்கர் எப்படி உள்வாங்கி எடுத்தாண்டு இந்தியத் தேவைக்கேற்ப எளிமைப்படுத்தியுள்ளார் என பார்க்க முடியும்.

டூயி டப்ட் எதிக்ஸ் பாராவில்

Rules are practical, they are habitual way of doing things. But principles are intellectual, they are useful methods of judging things. The fundamental error of the intuitionalist and of the utilitarian is that they are on the lookout of rules which will of themselves tell agents just what course of action to pursue, whereas the object of moral principles is to supply standpoints and methods which will enable the individual to make for himself an analysis of the elements of good and evil in the particular situation in which he finds himself.

No genuine moral principle prescribes a specific course of action, rules like cooking recipes, may tell just what to do and how to do it. A moral principle, such as that of chastity, of justice, of the golden rule, gives the agent a basis for looking and examining a particular question that comes up. It holds before him certain aspects of the act, it warns him against taking a short or partial view of the act.

மேற்கூறிய பாராவின் கருத்தாக்கத்தை சாதியை ஒழித்தல் நூலில் அம்பேத்கர் பயன்படுத்தியிருப்பார். சிலவரிகளை அப்படியே எடுத்தாண்டும், சிலவற்றை மாற்றியும் எழுதி நமக்கு தந்திருப்பார். அம்பேத்கர் வரிகளை படிக்கும்போது இதை நாம் உணரலாம்.

அம்பேத்கர் எழுதிய வரிகள்

Rules are practical, they are habitual way of doing things according to prescription. But principles are intellectual, they are useful method of judging things. Rules seek to tell an agent just what course of action to pursue. Principles do not prescribe a specific course of action.

Rules like cooking recipes, do tell just what to do and how to do it. A principle, such as that of justice , supplies a main head by reference to which he is to consider the bearings of his desires and purposes, it guides him in his thinking by suggesting the important consideration which should bear in mind. The difference between rules and principles makes acts done in pursuit of them different in quality and in content.

இதே போல் slavery என்கிற concept டூயிடமிருந்து அம்பேத்கர் உள்வாங்கி எடுத்தாண்டது பற்றியும் இந்நூலில் பார்க்கலாம். Annihilation of casteல் எப்படி பல கருத்தாங்கள் உள்வாங்கப்பட்டு, அம்பேத்கரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தனி சாப்டர் ஒன்றின் வழி ஸ்காட் நமக்கு தருகிறார்.

விடுதலை போராட்டக்கால இந்தியாவில் தலைவர்களை பெரும்பாலும் மேற்கு சிந்தனைகள் பாதித்தன. காந்திக்கு டால்ஸ்டாய், ரஸ்கின், தோரா என்பது நன்றாக நிறுவப்பட்ட ஒன்று. நேருவிற்கு மார்க்ஸ், லெனின், டிராட்ஸ்கி சோவியத் மற்றும் பிரிட்டிஷ் சோசலிச சிந்தனைகள் என்பதும் ஓரளவிற்கு உணரப்பட்டுள்ளது. அம்பேத்கருக்கு டூயி, டப்ட், ரஸ்ஸல் தவிர வேறு எவர் , அவரை செதுக்கினர் என்கிற ஆய்வு கூடுதலாக தேவைப்படுகிறது. எந்த மார்க்சிய சோசலிச நூல்களை அல்லது விமர்சன நூல்களை அவர் உள்வாங்கி எடுத்தாண்டார் என்பது தெரியவில்லை. ஸ்காட் நூல் இதில் நல்ல துவக்கம்.

may 11

Let Common sense be our companion

It seems that as on date, Central Govt is not showing any intention to frame 'Separate rules for Pension Revision' for CG pensioners and so there will not be any question to any rule for pension revision to BSNL Absorbed pensioners also. Both CG pensioners and BSNL absorbed are having pension rules with intended sub rules. It seems that both the main national parties are not interested to place 8 th CPC in their manifesto.

Govt is doing pension revision to their CG pensioners along the pay revision of its employees through CPC and on the basis of the recommendations . For BSNL absorbed also, there was pension revision after pay revision of their employees w.e.f 1-1-2007.

Regarding CG pensioners, they got their pension revision as per 7 th CPC OMs of DOPPw simultaneously with their employees w.e.f 1-1-2016. For BSNL absorbed pensioners , no such revision is there till date.

PBCAT Delhi has directed to revise the pension of absorbed as per the rules analogous to CG pensioners. Here rules meant what is the question that need clear answers beyond doubt. There is no such pension revision rules for CG pensioners. OMs are there for revision. If that is construed as rules then , no question of pension revision as demanded by pensioners' associations from 1-1-2017. That date is not connected with those OMs.

If the rules are meant 37A , there is no provision in that for pension revision. When there is no general rule for pension revision to CG pensioners, no question of amending this 37 A by inserting some sub rule for pension revision.

So what the CAT is meaning by stating the direction according to rules, is to be clarified. Or the associations gone to the CAT and got that judgment should clarify, what they think as rules for pension revision, barring that OMs of DOPPw, if any.

DOT has taken explicit position that , they cannot implement CAT judgment and so they have gone to Delhi HC to quash the same . On the other side, associations have gone for contempt petition to pull up DOT for not implementing the direction as per the rules analogous to CG pensioners.

If anybody knows what that rules the CAT directing, can kindly clarify publicly to get the clarified views on the judgment and the contempt.

I hope fighting in the air with good financial sticks or any shadow fight quoting irrelevant things , to satisfy one' s ego would take us no road.

It seems that as on date both DOT and BSNL are not in a mood to budge an inch in their respective positions. They offered 3 rd PRC scales with IDA merger but without any fitment. They want to use some loopholes in the 3 rd PRC recommendations to

settle the issue of both pay revision and pension revision, without seeking any exemption to the DPE OMs.

Associations can break their heads to attain what they desire, and knock the doors of Courts, as they have sound finance conditions , but efforts should not go wasted. If futile attempts are the only returns, then dissatisfaction and demoralisation may mount.

The associations who are all in the same or near the same positions of DOT are mostly inactive, and it seems away from the issue , leaving things to the fate.

One cannot grope long, should find light , but dogmatism will never help to find any ray of light.

Common sense is the best companion for both the associations as well as to the Trade Unions. Let us not close door to common sense.

11 hrs 11-5-2024 R. Pattabiraman

may 12

நடுவில் கொஞ்சம் பக்கங்களைக் காணோம்

இம்முறையும் இந்து தமிழ் திசை பெரியார் புத்தகம், எனக்கு வந்த காப்பியில் மூன்று கட்டுரைகளுக்கான பக்கங்களைக் காணோம். ராஜாஜி தொகுப்பில் , ஒரே கட்டுரை இரு இடத்தில் போட்டதை சுட்டிக் காட்டினேன்.

பெரியார் தொகுப்பில் நடுவில் கொஞ்சம் பக்கங்களைக் காணோம். எல்லா காப்பிகளும் அப்படித்தான் தைத்து பவுண்ட் ஆனது எனத் தெரிய வந்தால் அது ஆரோக்கியமானதல்ல. இந்து தமிழ் திசை இளம் குழுவினர், இது போன்ற சிறு குறைகளில் தங்களை கவனப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

may 12

திரு சாம் பிட் ரோடா அவர்கள் குறித்து சர்ச்சை எழுந்தவுடனேயே, அவருக்கு மரியாதை செய்திடும் வகையில் அவரின் The Idea of Democracy யை விரைவில் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

35 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் உரைகள் சிலவற்றை கேட்க டெலிகாம் ஊழியர்களாக எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்திரா அம்மையார் காலத்திலிருந்து இந்தியா வந்து போய், ராஜிவ் காலத்தில் டெலிகாம் மேம்பாட்டிற்காக உழைத்தவர் என்ற வகையில் எங்களின் மரியாதையை அவர் பெற்றிருந்தார். அதன் பின்னரும் மன்மோகன் காலத்தில் கட்டுமான மேம்பாட்டிற்காக அவர் தன் உழைப்பை தந்தவர்.

Better Mission Communication என்கிற அவரது உரைதான் எங்களிடம் முதலில் வந்து சேர்ந்தது. எங்கள் மாநாட்டில் டிஜிட்டல் வழியாக அவரது உரை எங்களிடம் வந்தது. இயக்கத் தலைவர் தோழர் குப்தாவுடன் அவர் தொடர் உரையாடல்களை மேற்கொண்டிருந்தார். பிட் ரோடாவின் அன்றைய cDot முயற்சி வெகுவாக இயக்கத்தோழர்களால் பாராட்டப்பட்டது. வழக்கமான bureaucrat ஆக அவர் நடக்காத தன்மையை, அவரை மற்றும் மீமாம்சி போன்றவர்களை பார்த்து உரையாடிவந்த குப்தா, ஜெகன் போன்றவர்கள் எங்களிடம் எடுத்துரைத்தனர்.

உன்னி கிருஷ்ணன் என்கிற ஓர் அமைச்சர் படுத்தியபோது, பிட் ரோடா பக்கம் நின்று அமைச்சருக்கு எதிராக நாங்கள் போராடினோம். இன்று இந்திய டெலிகாம் பட்டி தொட்டியெல்லாம் சென்றிருக்கிறதென்றால், பிட் ரோடா அதற்கு அளப்பறிய சேவையை செய்திருக்கிறார் என்ற எண்ணம் எழாமல் இருக்கமுடியாது.

அவரின் idea of democracy படித்தப் பிறகு ஏதாவது தோன்றினால் சொல்லக்கூடும்.

குஜராத்திலிருந்து சென்று அமெரிக்கா வாழ் , மேற்கு மனிதராக வாழ்ந்தாலும், இந்தியாவின் வளர்ச்சி என்கிற எண்ணம் கருகாமல் வாழக்கூடியவர் பிட் ரோடா என்றே எனக்கு தோன்றுகிறது.

may 13

காலத்தின் மிக மோசமான பலவீனம் தன் செல்வாக்கிழப்பை உணரவோ, ஏற்கவோ, எதிர்பார்க்கவோ முற்படுவதில்லை. நம் காலம் கடந்து விட்டதென்பதை யாரும் ஒப்புக்கொள்வதில்லை. பரிதாபம்

பழுப்பு இலைகள் கீழே உதிர்ந்து கிடந்தன. பகல் இன்னும் இருந்தது

அக்னி நதி குர் அதுல்ஐன் ஹைதர்

may 15

2019- காந்தியின் 150 ஆம் ஆண்டில் மீள் பதிப்பாக புதிய அட்டையுடன் சார்லஸ் ஆண்ட்ருஸ் எழுதிய Mahatma Gandhi His Life and Ideas என்பதை ஜெய்கோ நிறுவனத்தார் கொணர்ந்தார்கள். காந்தி குறித்த தேர்ந்த நூல்களில் ஒன்று.

சரியாக சொல்லப்போனால் மேற்கு மனிதர்களிடம் காந்தியை அவரது சோதனை வழி சிந்தனை செயல்பாடுகளை கொண்டு செல்தல் என்ற வகையில் ரொமெயின் ரோலந்த், ஆண்ட்ருஸ் போன்றவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் , இவை போன்ற நூல்களின் வரவாயின.

ஆண்ட்ருஸ் 1929ல் Mahatma Gandhi's Ideas Including selections from his writings என்ற பெயரில் தான் எழுதியிருந்தார். அந்த புத்தகத்தை தான் , மேற்கண்ட பெயருடன் ஜெய்கோ 2005 ல் , அருண் காந்தி முன்னுரையுடன் கொணர்ந்தது. அதையே புதிய அட்டையுடன் அவர்கள் 2019ல் கொண்டு வந்தனர். அருண் காந்தி இன்றுள்ள உலகுடன் காந்தி குறித்த உரையாடலை செய்திருப்பார்.

1929-30 களில் காந்தி ஆண்ட்ருஸ் நட்பு 15 ஆண்டுகளை தொட்டது. தாகூருடனும் சற்றும் குறையா அளவு ஆண்ட் ருஸ் தோழமை இருந்தது. இந்த இருவரையும் மேற்கு நன்றாக தெரிந்துகொள்ளவேண்டும் என ஆண்ட் ருஸ் விழைந்தார்.

மேற்கின் மக்களுக்கு காந்தியைப் பற்றி சொல்லவேண்டுமானால், இந்தியாவின் சமயச் சூழல் எப்படியிருந்தது, இந்துயிசம் என்பதை எப்படி புரிந்துகொள்வது, இந்து- முஸ்லிம் மோதல், கிறிஸ்துவ தொடர்புகள்- ஏசுவின் இடம், தென்னாப்பிரிக்க போராட்டம், ஆஸ்ரம சோதனைகள், அகிம்சை- கதர்- சத்தியாகிரகம், உண்ணா நோன்புகள் போன்ற பல அம்சங்களை தொட்டுக்காட்டி , தனது பிரதிக்கான அணுகுமுறையை சார்லஸ் மேற்கொண்டிருப்பார்.

முதல் சாப்டர் The Background of Hinduism , மிகச் சுருக்கமாக சார்லஸ் ஆண்ட் ருஸ் தன் புரிதலை சொல்லிவிட்டு, காந்தி (1930வரை) இந்துயிசம் என்பதை எப்படி புரிந்துகொண்டு பேசிவந்தார் என்பதையும் சுருக்கமாக சொல்லிச் செல்வார்.

ஆண்ட் ருஸ் 1929ல் நச்சென்று ஒருவரியை சொல்லியிருப்பார். வேறு மண்ணில் பிறந்து, இந்தியா வந்து இங்குள்ள மக்களின் மொழி புரிந்து , மண்சார்ந்த கலாச்சார மொழி உரையாடல்களை சரியாக உள்வாங்கி, உள்ளூர் மனிதன் போலவே புரிந்துகொள்வது எளிதான ஒன்றல்ல. எவ்வளவு ஆங்கில மொழி பயிற்சி இருந்தாலும், பிரஞ்சு அல்லது வேறு மொழி பயிற்சி இருந்தாலும் மேற்கின் தொன்மங்களின் வழியாக அவர்கள் வாழ்க்கையை நம்மால் எளிதாக புரிந்து கொள்ளவியலாது. அதேபோல இந்தியர் பற்றியும் மேற்குகாரர் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. இந்திய மண் குறித்த புரிதலில் ஆண்ட் ருஸ் வெற்றி கண்டார் என்றே சொல்லமுடிகிறது.

ஆண்ட் ருஸ் எழுதிய , இந்திய சமூகத்தை அப்பட்டமாக பிரதிபலிக்கும் அவ்வரி

In Hindu Religion, caste is marriage , and marriage is caste

The Hindu Muslim Problem என்பது ஆண்ட் ருஸ் எழுதிய இரண்டாவது சாப்டர். இந்நூல் முழுவதுமே அவர் கையாண்ட அணுகுமுறை என்பது, எடுத்துக்கொண்ட தலைப்பு குறித்து அவர் புரிதலை முதலில் வெளிப்படுத்திவிடுவார். காந்தி அது குறித்து(1930 வரை) என்னவெல்லாம் பேசினார்- என்ன கருத்தை வெளிப்படுத்தினார் என்பதை தொகுத்து கூடவே சொல்லியிருப்பார்.

காந்தி எப்போது பேசினார், எங்கு பேசினார் என்பதை ஆண்ட் ருஸ் இடம் தேடினால் கிடைக்காது. ஆண்ட் ருஸ் ஆதாரங்களை சொல்லி ஆவணப்படுத்தும் வேலை ஏதும் இந்நூலில் செய்யவில்லை. அவர் புரிதலை, காந்தி புரிதலை அனுபவத்திலிருந்து பிழிந்து சாரமாக தருவதை படிப்பவரால் உணரமுடியும்.

சரி. இந்து முஸ்லிம் பிரச்சனை என்கிற அந்த அத்தியாயத்தில் மிக முக்கிய வடக்கு தெற்கு பற்றிய அவரின் புரிதல் ஒன்றை மிக அற்புதமாக ஆண்ட் ருஸ் வைத்தார். இந்துக்களுக்கு வடக்கு , இஸ்லாமியர் ஆட்சியின் பாதிப்பை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் தந்தது. தீண்டாமை வடக்கில் தெற்கைப்போல் intensive *ஆக இல்லாமைக்கு இஸ்லாம் ஒரு காரணம் என்கிற அனுபவ ஆய்வு கருத்தாக்கத்தை ஆண்ட் ருஸ் இதில் வெளிப்படுத்தியிருப்பார். அவ்வரிகள் சற்று நீளமானவை என்றாலும் , தெற்குகாரர்கள் புரிதலை சற்று சரிபடுத்தும் எனத் தோன்றுகிறது.*

When we contemplate India as a whole today, in the north as well as south, we see how , in certain matters that are vital,and essential, the north of India has been truly purged by the presence of Islam from the accumulation of dead and decaying matter which was unwholesome and even poisonous.

If the miasma of untouchability and of the lower mists of idol worship have been lifted from the atmosphere of Northern India more than South, it is not little due to the constant presence of a faith which swept aside the luxuriant ritual growth that had encumbered the pure worship of one God, and insisted at the same time that in His presence all believers are equal.

Thus Islam has been in India, wherever it has held sway, a cleansing medium

மூன்றாவது சாப்டர் The Christian Contact . *இதில் முக்கியமாக தான் கண்ட ஒன்றை காந்தி வழி ஆண்ட் ருஸ் தருவார். இந்துயிசம் குறித்த மனிதாபிமானமற்ற அதன் நடைமுறை அனுசரிப்புகளுக்கு அது* inhuman doctrine *ஆக இருப்பதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். காந்திக்கு தியரி என்ன, பூர்வீக வரலாறென்ன என்பதைவிட, கண்ணில் நடைமுறையில் தீங்கானதாக என்ன இருக்கிறது- அதை தன்னில் துவங்கி எப்படி நீக்கி இணக்க சமூகத்தை உருவாக்குவது என்பதுதான் முக்கியமானதாக இருந்தது. இங்கு ஆண்ட் ருஸ் சொல்லும் வரிகள்*

If he (Gandhi) was forced to believe that untouchability was an integral part of Hinduism, he would at once abandon such a faith. But in practice he has demonstrated that the Hindu Religion, both in its origin and in its practice , carries with it no such inhuman doctrine.

நடைமுறையில் நம் அனுசரிப்பென்ன என்கிற மிக முக்கிய கேள்வி , ஒவ்வொருவரையும் நோக்கி இங்கு வீசப்படுகிறது.

சார்லஸ் ஆண்ட் ருஸ் அவர்களின் இந்நூல் வாசிக்கப்படவேண்டிய ஒன்று. வாய்ப்புள்ளவர்கள் படிக்கட்டும்.

சார்லஸ் ஆண்ட் ருஸ் பற்றி அறிய ஆங்கிலத்தில் நூல்கள் உள்ளன. ஓரளவிற்கு நல்ல அறிமுகத்தை தர நான் அறிந்த தமிழ் நூல் ஒன்றும் உள்ளது. 'தீனபந்து ஆண்ட் ருஸ்' என்று ,

எழுத்தாளர் தி ஜ ர கச்சிதமாக செய்திருப்பார். வாய்ப்புள்ளவர் அந்த எளிய நூலை வாசித்துப் பார்க்கலாம். தொண்டுள்ளம் ஒன்றின் சித்திரமாக இருக்கும்.

may 16

ஒருவர் மேற்கொள்ள விழையும் மதமாற்றமானாலும், வேறு இசம் சார்ந்த நம்பிக்கை / கருத்து மாற்றமானாலும் , புதிய தலைவர் அல்லது புதிய ஞான குரு என தேர்ந்தெடுப்பதானாலும் சரி , காந்தியின் இந்த வரிகள் பொருந்தும் எனப்படுகிறது.

A higher standard is expected of those who change their faith, if the change is the matter of heart and not of convenience

Conversion must not mean denationalisation. Did they cease to be Indians because they had become Christians (Muslims) ? Conversion should mean a definite giving up of the evil of the old, adoption of all the new, and a scrupulous avoidance of everything evil in the new. Conversion therefore mean a life of greater dedication to one’s country, greater surrender to God, greater self purification

I am painfully aware of the fact that conduct everywhere falls short of belief

If you will do moral scavenger’s work , so,as to clean and purify your hearts and get them ready you will find that all these mighty teachers will take their places without any invitation from us. That to my mind , is the basis of all sound education.

The culture of the mind must be subservient to the culture of the heart. May God help you to become pure

- inputs from Mahatma Gandhi His Life and Ideas C F Andrews ch 4 The place of Jesus

may 17

I have repeatedly observed that no school of thought can claim a monopoly of right judgement. We are all liable to err and are often obliged to revise our judgement. In a vast country like this, there must be room for all schools of honest thought. And the least, therefore, that we owe to ourselves as to others is to try to understand the opponent's view-point and, if we cannot accept it, respect it as fully as we expect him to respect ours".

- Gandhiji

may 17

This is about the Nuggets of History TN , a column in today's Hindu(may 17th 2024). One vertical of that columns speaks about the news of ' C Natesa Mudaliar opened a hostel for non- Brahmin students viz Dravidian Home'

எவராவது அறிந்தால் சொல்ல வேண்டுகிறேன். அந்த திராவிட இல்லம் எவ்வளவு ஆண்டுகள் நடத்தப்பட்டது. எவ்வளவு மாணவர்கள், எந்த சாதி மாணவர்கள்- எவ்வளவு, தலித் என ஒடுக்கப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனரா- அப்படி சேர்க்கப்பட்டிருந்தால் அவர்கள் கண்ணியமாக அங்கு நடத்தப்பட்டனரா என்ற விவரம் கூடுதலான புரிதலுக்கு உதவலாம்.

இந்துவில் இந்த செய்தியை தொகுத்தவர் #R.Saivenkatesh .

மேற்கண்ட கேள்வியே எழக்கூடாது என நினைப்பவர்களிடம் விவாதிக்க ஏதுமில்லை. திரு நடேச முதலியார் நடத்திய திராவிட இல்லம் குறித்து கூடுதல் விவரத்தை #thehindu வெளியிட்டால், அல்லது நீதி கட்சி, திராவிட இயக்க ஆய்வாளர்கள் வெளியிட்டாலோ, அப்படி ஏதாவது வெளியிட்டிருந்தால் அது குறித்து அறிய தந்தாலோ உதவிகரமாக இருக்கும்.

may 18

Dr Ambedkar said so Jan 18, 1943

"

All liberals I know will say our duty is to follow the master. What else could be the attitude of a devout band of disciples? But can anything be more mistaken or more uncritical?

Such an attitude implies two things. It means that a great man works by imposing his maxims on his disciples. It means that the disciples should not be wiser than the master. Both these conclusions are wrong "

Ambedkar wrote this in his book Ranade, Gandhi and Jinnah. That day might be for Gandhi and Jinnah

Today applicable to all who claims or shown as masters

may 18

The Idea of Democracy என்கிற நூல் இவ்வாண்டு 2024 ல் வந்த ஒன்று. சாம் பிட் ரோடா எழுதிய இப்புத்தகத்தை பெங்குவின் கொணர்ந்துள்ளனர்.

சாம் பிட் ரோடா இந்திய அமெரிக்க வாழ்நிலைகளின் அனுபவத்தை பெற்ற டெக்னோகிராட். வளர்ச்சி ஆய்வாளர். டெலிகாம் நிபுணர் மட்டுமல்ல, இந்தியாவின் knowledge commission ல் பங்காற்றியவர். பல ஆய்வுகளுக்காக மதிக்கப்படுபவர்.

அவரின் மற்ற புத்தகங்கள் dreaming big, Redesign the world. அவற்றை நான் படித்ததில்லை. ஜனநாயகம் குறித்து அவர் எழுதி சமீபத்தில் வெளியான நூல் வாசிப்பு போய்க்கொண்டிருக்கிறது.

பிட் ரோடா இந்நூலில், தெரிந்த கருத்தாக்கங்கள், ஜனநாயகம் குறித்து ஏற்கப்பட்ட மதிப்பீடுகளை சுருக்கமாக நோட்ஸ் போல கொடுத்துவிட்டு, பல்வேறு டேட்டாக்களின் உதவியுடன் அமெரிக்க இந்தியா மற்றும் பல நாடுகளின் ஜனநாயக பண்புகளின் வீழ்ச்சி, இன்றைய ஆபத்தான போக்குகள் குறித்து இதில் விவாதிக்கிறார்.

இரு பகுதிகளாக நூலை பகுத்துக்கொண்டு முதல் பகுதியில்

The Essence of Democracy

The workings of Democracy

The state of global democracy

Democracy in the US

Democracy in India

என்கிற 5 உபதலைப்புகளில் பொதுவாகவும், குறித்த தன்மையுடனும் விவாதிக்கிறார்.

இரண்டாவது பகுதியில்

Capitalism and Democracy

Values in Democracy

Technology and Democracy

Leadership and Democracy

Redesigning Democracy என்கிற 5 அம்சங்களை விவாதிக்கிறார். இந்த அம்சம் ஒவ்வொன்றும் தனி நூல் அளவிற்கான பரப்பை பெறக்கூடியவை.

EIU என்கிற Economist Intelligence Unit 2022 ல் வெளியிட்ட அறிக்கை ,எவ்வளவு நாடுகள் ஜனநாயக தன்மைகளை கொண்டிருக்கின்றன என்கிற index ஒன்றை கொண்டிருந்தது. முழுமையான ஜனநாயகம் என்கிற பகுதியில் உலக மக்கள் தொகையில் 8 சதமே வாழ்கிறார்களாம். Flawed democracy என பழுதடைந்த பகுதிகளில் 38 சதமும், ஏதோ ஏனோ என hybrid வகையில் 18 சதம் என ஜனநாயக காற்றை எந்த வகையிலாவது சுவாசிப்பவர்கள் 64 சதமே இருக்கிறார்கள்.

அதேபோல voter turnout *எப்படி பல்வேறு நாடுகளில் குறைந்துகொண்டே வருகின்றன என்கிற ஆய்வறிக்கையும் வந்துள்ளது.* Voter Apathy *என்ற வகையில் இது பற்றி சாம் பேசுகிறார்.*

Our times are witnessing a fracture in the social contract between citizens and their political elite. They are becoming increasingly estranged *என்கிற மதிப்பீட்டை சாம் தருகிறார்.*

2016 *ஆய்வு* EiU *படி* 72 *நாடுகளில் ஜனநாயக மதிப்பீடுகளின்ன்சரிவு பேசப்பட்டுள்ளதை சாம் காட்டுகிறார்.*

Rise of populism *எப்படி பல நாடுகளில் எத்தகைய எதிர்மறை விளவுகளை தந்து வருகிறது என சாம் சொல்கையில்*

An increasing and rather worrying trend across the world is that political parties playing a nationalist feelings, targeting minority communities and inciting hatred against them. *என எழுதுகிறார்.*

பாப்புலிசம் தனக்கான பெரும்பான்மையை ஏதோவொரு வசியத்தில் கட்டிக்கொள்ளும். தன்னைப் போன்றவர்களை வீழ்த்தியதே, அந்த பிறர் என்கிற மைனாரிட்டிதான் ' என எதிரியாக அந்த பிறரை சித்தரித்துக்கொண்டே தன்னை பலப்படுத்திக்கொள்ளும். அந்த பழம்பெரும் எதிரிக்கு இன்றைய பலம் என்ன என எதார்த்த பரிசோதனைகளுக்கு அது இடம் கொடுக்காது. ஆயிரம் ஆண்டு, மூவாயிரம் ஆண்டு என எவரும் ஊகித்து இது தான் உண்மை என அறியமுடியா காலத்திலிருந்து தான் அடைந்து வரும் பாதிப்பை பிரதியாக்கி திரும்ப திரும்ப கதைக்கும். தான் விரும்புவதை உண்மைகள் எனச் சொல்லி கோணிப்பைகளை இட்டு நிரப்பி, ஊர் முழுக்க விநியோகிக்கும். அதில் தன் அதிகாரத்தை சுவைக்கும். அது தன் தலைமையில் முடிந்த அளவு சமூகத்தை polarise *செய்து எதிரும் புதிருமாக்கும்.*

இப்படி நாடுகளின் ஜனநாயக மதிப்பீடுகள் விழும்போது , அம்மக்களுக்கு நேரிடும் சில அம்சங்களை பிட் ரோடா சொல்கிறார்.

Undermining civil society

Undermining independence of the institutions

Abuse of Executive powers

Demonisation and intimidation of political opponents

Control of the media and narratives

Tech fuelled disruption and misinformation

நீளம் அஞ்சி நிறுத்துகிறேன். சாம் மேலும் எப்படி அழைத்துப் போகிறார் என்பதை பின்னர் பார்க்கலாம்.

may 19

பிட் ரோடா - ஜனநாயகம் 2

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். அரசியல் அமைப்பு சட்டம் பற்றி பேசும்போது, உள்ளதை உள்ளபடி ஷரத்து என்றால் ஷ்ரத்தாக குறிப்பிட்டு சொல்வது உகந்தது. வியாக்கியானங்கள் வேறு வேறாக இருக்கலாம்.

முகப்புரை என்றால் அதில் என்ன இருக்கிறதோ அதைத்தான் சொல்லவேண்டும். அதை அவரவர் கோணத்தில் வியாக்கியானப்படுத்தலாம்- அழுத்தம் தந்து விளக்கலாம். ஆனால் preambleல் இல்லாத ஒன்றை கவனக்குறைவாகவோ அல்லது போகிற போக்கிலோ இருப்பதாக சொல்லி செல்லக்கூடாது. இப்படியான ஒன்றை (தவறென சொல்லலாமா?) பிட் ரோடா செய்துள்ளார்.

முகப்புரையில் உள்ள முக்கிய பதங்களையெல்லாம் சொல்கிறார்- அதே நேரத்தில் ஆர்ட்டிக்கில் 1 யை அதில் ஏன் சேர்த்து சொல்கிறார் எனத் தெரியவில்லை. அதை அவர் செய்திருக்க வேண்டாம் எனத் தோன்றுகிறது. அவர் எழுதிய வரிகள்

The Preamble declares that India , that is Bharat, shall be union of states, a sovereign, socialist, secular, democratic republic committed to securing justice, liberty , equality and fraternity for all its citizens.

மற்ற எல்லாவற்றையும் முகப்புரை பேசுகிறதே தவிர, India that is Bharat, shall be union of states என்கிற declarative clause அதில் இல்லை என்பதை எப்படி பிட் ரோடா போன்ற ஒருவர் காணத்தவறினார் எனத் தெரியவில்லை.

சில நேரங்களில் over confidence நம்மை ஏமாற்றிவிடும். இது குறித்து அவர் நண்பர்கள் எவரும் சுட்டிக்காட்டாமல் விட்டனரா?

பிட் ரோடா வேறு ஒரு இடத்தில்

Capitalism and private business have a complex and multi faced role in promoting democratic values and contributing to the development of democratic institutions என எழுதுகிறார். சோசலிச சிந்தனையுடையவர்களுக்கு இதில் கருத்து மாறுபாடு இருக்கலாம். நமது நாட்டில் கார்ப்பரேட்கள் கட்சிகளுக்கு கொடுக்கும் கோடி கொடைகள், என்ன மாதிரியான ஜனநாயக விழுமியங்களை உற்பத்தி செய்கின்றன என்கிற கேள்வி வராமல் இருக்காது.

சட்டம் இயற்றும் அவை நேர்த்தியைப் பொறுத்தே ஜனநாயகம் தழைக்கும் என்கிற , நமது அனுபவத்திற்கு பொருத்தமான கருத்தொன்றை பிட் ரோடா எழுதுகிறார்.

Democracy can thrive best if it has a vibrant, knowledgeable, dedicated, courageous and legitimate legislature with character.

பிட் ரோடா பேசும் , இப்படியான நேர்த்தி கூடிய அவை வேண்டுமெனில், கட்சிகள் அனுப்பவேண்டிய வேட்பாளர்கள் தேர்வில் , அக்கட்சித் தலைமையின் கடமையும் பொறுப்பும் பிரதிபலிக்க வேண்டும். அவையின் கண்ணியம் என்பது , ஆளுங்கட்சியின் மேஜை தட்டல் அல்லது கேலி கூச்சலிலோ- அல்லது எதிர் கட்சிகளின் அமளி மற்றும் நிரந்தர

வெளிநடப்புகளிலோ இருக்க முடியாது. விவாதத்திற்கு உகந்த சூழலை , விவாதத்தை பொறுப்புடன் உருவாக்குதல் என்பதில் கட்சி விசுவாசம் தாண்டிய உறுதிப்பாடு அவை உறுப்பினர்க்கு பழக்கமானால் , 'அவை கண்ணியம்' என்பதற்கான index உயரும்.

எம்பி அல்லது எம் எல் ஏ அவை செயல்பாடுகள் என்பதற்கான index ஒன்றை தொகுத்து வெளியிடும் legislative members index மக்கள் முன்னர் ஆண்டுதோறும் எல்லா மொழிகளிலும் வைக்கப்படுதல் நலம். உலக நாடுகளின் சபாநாயகர்கள் நேர்மை பாரபட்சமற்ற செயல்பாடு குறித்தும், இந்திய சட்டமன்ற நாடாளுமன்ற சபாநாயகர் செயல்பாடுகள் குறித்தும் தனியான index ஆண்டுதோறும் மக்கள் முன்னர் வைக்கப்படுதல் நலம்.

AI போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி காலத்தில் அவை செயல்பாடுகள் குறித்த முழு பதிவையும் அலசி ஆய்ந்து , அவை யின் நேர்த்தி அல்லது அவலங்களை வெளிப்படையாக எடுத்துச் சொல்லி , awareness அதிகமாக்க வேண்டிய அதி அவசரத்தை இந்திய ஜனநாயகம் கோருகிறது.

19-5-2024

may 20

பண்டிதர் அயோத்திதாசர் குறித்து கடந்த 25 ஆண்டுகளாக நூல்கள் வெளிவந்து பரவலான வாசிப்பு வெளியைப் பெற்றன. அவரின் தமிழன் பத்திரிகை தொகுப்புகள் 1999ல் வந்தபோது நல்ல வரவேற்பை பெற்றன. வே ஆனைமுத்து அவர்களின் 1974 பெரியார் தொகுப்புகளுக்கு இணையான வாசக வெளி கிடைத்திருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.

கடந்த 2022ல் ஆய்வாளர் ஸ்டாலின் ராஜாங்கம் அவர்களின் தொகுப்பில் ‘ பண்டிதர் 175 ‘ நீலம் தோழர்களால் கொணரப்பட்டது. விரிவான வாசிப்பிற்கு இடமளிக்கும் வகையில் நீள அகல உயர 330 பக்க அளவிலான நூலாக வந்த ஒன்று. பல ஆய்வாளர்கள் பல்வேறு தலைப்புகளில் தங்கள் பங்களிப்பை தந்துள்ளனர். தொகுப்புரையாக நூல் உள்ளடக்க செய்திகளை ஸ்டாலின் ராஜாங்கம் தந்துள்ளார்.

பண்டிதர் காலமும் களமும் என்கிற முதல் பகுதி 12 கட்டுரைகளையும், பண்டிதர் முறைமை என்பதில் 6 கட்டுரைகளும், பண்டிதருக்கு அப்பால் என்பதில் 7 கட்டுரைகளும், புனைகளத்தில் 4 என நூல் தொகுக்கப்பட்டுள்ளது. கட்டுரையாளர்கள் அனைவரின் பெயரையும் குறிப்பிடமுடியவில்லை. அன்பு பொன்னோவியம், ஞான அலாய்சியஸ், ஆ இரா வேங்கடாசலபதி, வ கீதா, ராஜ் கௌதமன் போன்றவர்களின் கட்டுரைகள் நூலில் இடம் பெற்றுள்ளன. புதிய ஆய்வாளர்களாக பலர் தெரிகின்றனர்.

வாய்ப்புள்ளவர் வாங்கி படிக்கலாம்.

may 21

M k Gandhi said so

Moral courage is far higher than physical courage, but physical courage is to be preferred to cowardice.

I am no lover of any government. That government is best which governs least.

I have found that it is possible for me to be governed least...

As quoted by C F Andrews in Mahatma Gandhi His life and Ideas

may 21

நாடாளுமன்றத்திற்கு சென்ற எஸ் சி எம்பி க்கள் அவையில் செயலாற்றியமை- அவர்களின் பங்கு என்பது குறித்து ஒரு கட்டுரையை படிக்க நேர்ந்தது. நரேந்திர குமார் என்பவர் எழுதியுள்ளார். அவர் ஆய்விற்கு எடுத்துக்கொண்ட காலம் 1985-95. ஆய்வாளர் சுகதியோ தோரட் மற்றும் சுதா பாய் எடிட் செய்த புத்தகமான Politics of Representation என்பதில் நரேந்திரா கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் அறிக்கைகளின் மீது அவர்கள் எப்படி வினையாற்றினார்கள், நம்பிக்கையில்லா தீர்மானம், கவன ஈர்ப்பு, கேள்வி நேரம் போன்ற பல்வேறு அலுவல்களில் அவர்கள் பங்களிப்பு என்ன என சில கேள்விகளின் வழி பதிலை ஆசிரியர் தேடியுள்ளார்.

பல உறுப்பினர்கள் தலித் மாணவர் விடுதி, ஊக்கத்தொகை, காலியிடங்களை நிரப்புதல், தலித் நல நிதி போன்றவற்றை அதிகம் எழுப்பியிருக்கின்றனர். அதேபோல இடஒதுக்கீட்டு பிரச்சனை, பதவி உயர்வில் ஒதுக்கீடு, வன்கொடுமைகள், தெரு சுகாதார தொழிலாளர் பிரச்சனைகள் போன்றவற்றில் பேசியவர்களில் அதிகமாக எஸ் சி எம்பி க்கள் இருந்துள்ளனர். எஸ் சி எஸ் டி தேசிய கமிஷன் பில் தொடர்பாக 19 எம்பிக்கள் பேசியுள்ளனர். Free education to the children of safai karmacharies என்பதில் 27 எம்பி க்கள் உரையாற்றியுள்ளனர்.

1985-95 கால எழுப்பட்ட கேள்விகளில் ஏன் எவரும் நிலம் சார்ந்த பிரச்ச்னைகளை எழுப்பவேயில்லை என்கிற கேள்வியை நரேந்திரா வெளிப்படுத்தியுள்ளார்.

Reservation in Public schools, Non availability of Judges in HC, Sc விவாதமாகவில்லை என்கிறார். அவரின் ஆய்வில் அவர் வந்தடையும் புள்ளி dearth of discussion on policy questions என்பதாக இருக்கிறது.

எழுப்பட்ட நட்சத்திர கேள்விகளில் சில பெட்ரோல் பங்க், காஸ் ஏஜென்சி எவ்வளவு தரப்பட்டுள்ளது என்பதாக இருக்கிறது. இவையெல்லாம் துறை சார்ந்த ஆண்டறிக்கையிலேயே கிடைத்துவிடும். பெறப்படும் பதில்களில் பெரும்பாலும் திருப்தி அடைந்துவிடும் சூழல்தான் நிலவியது.

நாடாளுமன்ற கமிட்டியிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியவில்லை என்கிற முடிவிற்கே ஆசிரியர் வருகிறார். நரேந்திர வரிகளில்

Thus , representation is not a guarantee of participation, and participation is not an insurance of effective representation. Effective representation expects proper judgement of policies

...though the Parliament does deliberate upon issues, it does so both poorly and inadequately. And even MPs raise concerns for SC, the response of the Govt remains negligible and muted.

வருகிற 2024 நாடாளுமன்றம் நல்ல அனுபவங்களை உருவாக்கினால் மகிழ்ச்சி

may 22

Pension Revision in the light of RTI reply

I happened to go through 'the advice or comments of various concerned ministries' , sought by DOT in connection with PB CAT judgment dated 20-9-2023. BSNL absorbed pensioners should thank Shri Amar Nath Thakur of Kolkata for getting this information through RTI.

The replies given by the departments are very clear , regarding this case.

Department of Legal Affairs in its advice dated 20-10-2023 opined:

5. Rule 37 of CCS pension Rules 2021 provides, conditions for payment of pension on absorption consequent upon conversion of a Govt department into a PSU. Further…

6. In view of the above, it is the domain of the Govt to specify the manner in which financial liabilities shall be met in this regard. As per the referring department, the combined service pensioners are governed by PRC recommendations. Though, recommendations of the 3 rd PRC has been implemented in most of the PSUs, it has not been implemented in the BSNL/ MTNL, so there is no thrust to revise the pension of the retired employees.

7. Taking into account factual matrix of the case in hand and rule position in this regard, it seems to be a fit case for challenge. However, DOT may take decision in consultation with the DOPPw and DPE being nodal departments on the issue in hand.

Advice given is : 'a fit case for challenge ' with a rider of lenience to consult nodal departments.

DOPPw in its reply commented (dated 15-11-2023):

3. Since the Hon' CAT has ordered for revision of pension and family pension as per relevant rules, it is for DOT to take administrative decision in the matter DOPPw has no further comments to offer.

Here, It seems that , one can have perception so, DOPPw is evasive, not openly advised DOT to challenge the case, but indirectly pointed out the responsibility of DOT to take administrative decision about the case . DOPPw felt that DOT is the competent authority to revise pension strictly in accordance with the relevant rules. Everyone knows that DOPPw is the department for 'pension related rules' and its interpretations. Normally, if DOPPw agrees with a position , then it gives no objection to execute the same. Here we found neither explicit 'no objection' for challenging the case, nor for implementing as per the rules DOPPw feels right.

But for DOT , the only pension related rules given by DOPPw for absorbed employees retiring , is rule 37 A, the present rule 37 of 2021. That rule is only for fixation of pension to all the absorbed retired, retiring and to be retired as per their pay . Not for any revision of pension. For pension revision, DOT is following the practice, after if any pay revision is done in BSNL/ MTNL.

DPE in its reply dated 17-10-2023:

Mentioned about its OM dated 8-12-2020. We have to check what was conveyed in that om earlier to DOT. Then it added “ that the matter concerns DOT and DOPPw and DPE has no role in the matter”.

DPE correctly dragged DOPPW also here. But why DOPPw , if it is ‘favourable to implement CAT judgement’ is not advising or suggesting DOT a way out, as that is the department for pension related rules. It is the department which asked DOT how and what is its proposal to solve the pre and post 2017 anomaly , if pension revision in the case absence of pay revision.

If my memory is correct, I can recollect that during the time of inter ministerial discussions, DPE was in favour of implementing 3rd PRC linking with VRS. But that was not accepted by the committee led by Shri Amit shaw.

DOE in its reply dated 4-1-2024 is categorical.

2. In this connection, it is submitted that pension being derivative of pay needs to be revised in line with the applicable last pay drawn of the existing pay scales. Making any deviation in the existing criteria of pension fixation may have grave repercussions. In this regard , the view taken by the Administrative Ministry challenging the order of 20-9-2023 of the CAT appears to be appropriate. Accordingly , DOT is requested to defend the interests of UOI on behalf of secretary Expenditure. Dot is also requested to get the draft reply vetted by DPE, DOPPw and DOE before filing WP in HC of Delhi.

So DOE reiterated the criteria of pension derivative of pay relating to last pay drawn . DOE felt challenging CAT direction also an appropriate one. It guided further to get the draft of WP vetted with DPE, DOPPw and DOE. We do not know, how the ministries commented the draft , felt any correction before vetting. it is possible for DOT to go an appeal , it’s WP Delhi , only after reaching proper understanding with all the said 3 departments.

It is difficult to differentiate the positions of nodal departments, when they decided to defend the hitherto criteria followed by UOI in deciding pension derivative of pay (so pension revision with pay revision) . Blaming any department as culprit will not help.

The challenge is real and hard. But the question is whether the associations’ serious fight to challenge the existing method of fixing pension, executing pension revision, is going to succeed in the corridor of courts. Associations may feel the task is not an impossible one to fight out. Let me also wish them success.

Without pay, pension cannot be derived that is the rule of the day for both CG as well as BSNL employees on retiring. No nodal department mentioned if at all, none other rules except 37 A. No 7th CPC OM issued by DOPPw was mentioned . Some are arguing about rule 66 of 2021, which is not applicable to us, if they read correctly the connecting rules, including 37.

For pension revision, some associations have taken the position, that there is no need of new pay scales. This confusion need to be cleared amongst the pensioners. Let us hope further escalation of positions Of both sides , do no harm to the future of bsnl absorbed pensioners.

17 hrs 22-5-2024 R. Pattabiraman

may 24

கார்ல் மார்க்ஸ் குறித்த முன்னோடி சரிதையாக பிரான்ஸ் மெரிங் எழுதிய Karl Marx The story of His Life பார்க்கப்படுகிறது . 'life and works ' என மெரிங் பெயரிடவில்லை என்பதையும் விளக்கிவிடுகிறார். 1918ல் ஜெர்மான்ய மொழியில் எழுதப்பட்ட இந்நூல், 1935ல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. Edward Fitzgerald மொழிபெயர்த்திருந்தார்.

மெரிங் மார்க்ஸ் குறித்த பெருமிதங்களை, அவருக்கு தோன்றிய சில விமர்சனங்களுடன் இந்த வாழ்க்கை வரலாற்றில் எழுதியிருப்பார். மெரிங் மார்க்சைப் போல பகுனினையும், லசேலையும், லீபினெக்ட் போலவே பெர்ன்ஸ்டைனையும் புரிந்துகொள்ள முயன்றார். இந்த விவாதங்களில் அவர் anti Marxist என்ற கெட்ட பெயரையும் எடுத்தார். ரோசா லுக்சம்பர்க் உடன் நின்று காட் ஸ்கியையும், ரியாஸ்னாவையும் எதிர்த்து போராடினார் மெரிங்.

மார்க்ஸின் புதல்வி திருமதி லாரா லபார்க் , மெரிங் மீது நம்பிக்கை வைத்திருந்தவர். அவரும் ஒரு வகையில் மெரிங் இந்நூல் எழுத தூண்டல் எனச் சொல்லலாம்.

இந்நூலின் 1962 பதிப்பு மாக்ஸ் ஷாக்டன் Max Shachtman அறிமுக உரையுடன் வந்தது. இணையத்தில் கிடைக்கிற நூல். இதையே 'சிந்தன்கிளாசிக்ஸ்' என்று சிந்தன் பதிப்பகம் 2019ல் தங்கள் பதிப்பாகக் கொணர்ந்தனர். 600 பக்கங்கள் கொண்ட நூல். 2019ல் என்ன விலை வைத்தனரோ தெரியவில்லை. 2022 ஜனவரியில் ஸ்டிக்கர் ஒட்டி ரூ 800 என ஆக்கியிருந்தனர். இப்போதும் அதே விலையா எனத் தெரியவில்லை. பதிப்பகத்தார் போட்ட முதலீடுக்கு ஒருவகை வட்டியை வாசகர்கள் கொடுப்பது போல தோன்றியது. அல்லது inflationக்கான ஈடு என எடுத்துக்கொள்ளலாம்.

மார்க்ஸ் குறித்து அதிகம் refer ஆகும் நூல் . மாக்ஸ் ஷாக்டன் தன் அறிமுகத்தில் இப்படி சொல்வார்

Mehring's biography of Marx is to be recommended as it always been by serious scholars and students, as the best introduction to the works , to the life and struggle of the most eminent figure in world socialism.

Mehring லிபரல் பத்திரிகையாளராகவும் இருந்தவர். பிஸ்மார்க் எதிர்த்து ஜனநாயக பத்திரிகைகளில் எழுதியவர். கிளாரா ஜெட்கினும், ரோசாவும் அவருக்கு துணை நின்றனர். இந்நூலை அவர் கிளாராக்குத்தான் சமர்ப்பணம் செய்திருந்தார். ரோசா , மார்க்ஸின் காபிடல் குறித்த பகுதிகளை எழுதியவர் என்கிற வாக்கு மூலத்தை மெரிங் தந்திருப்பார். எனவே ரோசாவும் இந்நூல் குறித்து நேர்மறை பார்வை வைத்திருந்தவர் எனும் போது, இந்நூல் கூடுதல் சிறப்பைப் பெறுகிறது.

நூற்றாண்டை கடந்த நூல். ஆங்கிலத்தில் வந்தே 90 ஆண்டுகள் ஆகப்போகிறது. இன்றும் இந்நூல் பதிப்புகளைக் கண்டு மார்க்ஸ் குறித்த ஆர்வலர்களிடம் செல்வது பாராட்டிற்குரியது. இதன் தமிழ் வடிவத்தை என் சி பி எச் கொணர்ந்த நினைவு. சரியா என திட்டமாக சொல்லத்தெரியவில்லை. தஞ்சை தோழர் பீர் முகமது அதைக் காட்டிய நினைவு. பீர் இதைப்படித்தால் சொல்லமுடியும்.

மெரிங் இந்நூலை லீனியராக காலவரிசைப்படித்தான் அழைத்துச் செல்கிறார். 15 பெரும் அத்தியாயங்களில், 88 உப தலைப்புகளில் அவர் யாத்திருப்பார்.

இந்த பதிவில் on Jewish question பகுதியில் ரூகேவிற்கான பதிலாக இளம் மார்க்ஸ் சொன்ன வரிகளைத் தருகிறேன். இந்தியாவிற்கும் கூட பொருத்தமாக இருக்கலாம். அதை appropriate செய்து காந்தி, அம்பேத்கர், பெரியார் எனக்கூட நீட்டித்துக்கொள்ளலாம்.

Every revolution dissolves the old society and in so far as it does this it is social. Every revolution overthrows the old power and so far as it does this is political

A social revolution with a political soul as demanded by Ruge , was senseless, but a political revolution with a social soul was reasonable

மெரிங் புத்தகத்திற்கு பின்னர், மார்க்ஸ் குறித்து மேலும் மேலும் புதிது புதிதான செய்திகள் அறியப்பட்டு வால்யூம்களும், நூல்களும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆர்வமுள்ளவர்க்கும், ஆய்வாளர்க்கும் ஏராளம் கொட்டிக்கிடக்கின்றன. கொஞ்சம் நிதி செலவாகும். சிலவற்றை கண் சிரமப்பட இணையத்தில் படிக்கலாம். மார்க்ஸ் வாழ்க்கை குறித்து படித்த நினைவிற்கு வரும் சில நூல்கள்

Otto Rhule - Karl Marx his life and works

David Riazanov- Marx Engels An Introduction

Isaiah Berlin - Karl Marx

Max Beer- Karl Marx

Marx as politician - David Felix

Hegel to Marx - Sydney Hook

Marx Remembered - Philip Foner

Peter Worsely- Marx and Marxism (பிரமிள் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளது)

Peter Singer- Marx A very short introduction

Harold Laski - Karl Marx an essay

David McClellan- Karl Marx His Life

Francis Wheen - Karl Marx

Marx an Illustrated History - Werner Blumenberg

Gregory claeys- Marx and Marxism

Jonathan Spencer- Karl Marx A Nineteenth century life

Meghnad Desai- Marx's Revenge

Gareth Stedman Jones- Karl Marx Greatness and Illusion (2017ல் வந்தது)

சாமிநாத சர்மா - கார்ல் மார்க்ஸ் (பெர்லின் மற்றும் ஹரால்ட் லாஸ்கி தழுவல் எனலாம்)

மார்க்ஸ் பிறந்தார் ஹென்றி வோல்காவ்

அப்பாத்துரையாரின் மார்க்ஸ்

சாமி சிதம்பரனாரின் மார்க்ஸ்

மார்க்ஸ் எங்கெல்ஸ் குறித்த நினைவுகள்

இந்திய மார்க்சியர் கட்சித்தலைவர்கள் அவ்வப்போது எழுதிய சில கட்டுரைகள்

மார்க்சியம் குறித்து என்றால் ஏராள நூல்கள் ஆர்வமுள்ளவர்க்காக இருக்கின்றன. சுய கல்வி பயிற்சி இருந்தால் கொஞ்சம் தேறலாம்.

may 27

Aakar நிறுவனத்தார் 2020ல் Gandhi, Marx and India என்பதைக் கொணர்ந்தனர். 2001ல் மறைந்த புகழ் வாய்ந்த , பாட்னாவில் வாழ்ந்த பிரதான் பிரசாத் எழுதிய புத்தகமது. சோவியத் வீழ்ச்சிக்குப் பின்னர் 1992ல் பிரதான் இதை எழுதினார்.

பாட்னா எகனாமிக் அசோசியேஷன் நண்பர்கள், பிரதானிடம் கற்றவர்கள் அவர் நினைவை மீட்கும் வகையில் , ஆகார் வழி இந்த நூலை கொண்டு வந்துள்ளனர்.

மார்க்ஸ் காந்தி குறித்து நூல்கள் இருக்கின்றன. காந்தியர்கள் மார்க்ஸ் குறித்தும், மார்க்சியர்கள் காந்தி குறித்தும் எழுதியுள்ளனர். லெனின் - காந்தி, ஸ்டாலின்- காந்தி, மாவோ- காந்தி குறித்தும் நூல்கள் வந்தன. தோழர் பட்டாபியின் " காந்தியைக் கண்டுணர்தல், தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்கள்" இந்த திசையில் அமைந்த பிரதிகள்தான்.

பிரதான் அவர்களின் 'காந்தி , மார்க்ஸ் மற்றும் இந்தியா' அளவில் மிக கச்சிதமாக 140 பக்கங்களில் அமைந்த நூல்தான். பாடத்திட்டக் குறிப்புகள் போல அமைந்த நூல். பேசப்பட்டுள்ள விஷயங்கள் ஒவ்வொன்றும் விரித்து விவரமாக புரிந்து கொள்ள (முன்னரே புரிந்து கொண்டிருந்தால்) அதற்கு பெரும் உழைப்பு தேவைப்படும் (அல்லது தேவைப்பட்டிருக்கும்) .

மார்க்ஸ் எங்கெல்ஸ் புரிதல், லெனின் சோவியத் சோசலிச கட்டுமான புரிதல், சோவியத் வீழ்ச்சி- ஏற்பட்ட கோளாறுகள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி- காந்தியின் நுழைவு- விடுதலைப் போராட்டம்- சுதந்திர இந்தியாவில் நேருவின் ஆட்சி- கம்யூனிஸ்ட் பிளவு- எம் எல் தோழர்கள் புரிதல் என ஒவ்வொன்றும் குறித்து மிகச் சுருக்கமாக ஒவ்வொரு பாரா என்கிற வகையில் பிரதான் அடுக்கி செல்கிறார்.

லெனின் புரிந்து எழுதிக்கொண்ட வகையில் சோவியத்தை கட்ட முடியவில்லை, காந்தி விரும்பிய வகையில் நேருவும் மற்றவர்களும் புதிய இந்தியாவை கட்ட முன் வரவில்லை என்கிற புள்ளிகளை பிரதானும் வந்தடைகிறார். லெனின் சோதனை குறித்து பிரதான் இவ்வரிகளையும் தந்துள்ளார்

"Lenin laid the foundation of emergence of a privileged stratum in the party which began to usurp more and more power and privileges for itself with the passage of time.

As struggle for being part of the privileged stratum within the party intensified and gathered momentum, all those who differed with the official party line were invariably condemned as class enemies of the proletariat and peasantry.

This process also resulted in the increasing use of state machinery for suppressing the so called class enemies in place of ideological and political struggle for uniting and working together with the overwhelming majority of people in the society

அதேபோல லெனினும் மாவோவும் தங்கள் சோதனைக்கான மார்க்சிய தியரியை எப்படி புரிந்து எடுத்துக்கொண்டனர் என்பதற்கான வரிகளை பிரதான் தருகிறார். லெனின் சொன்னது

We do not regard Marx's theory as something final and inviolable, on the contrary, we are convinced that it has only laid the cornerstones of science which socialists must advance in all directions if they do not want to lag behind the March of life

மாவோ கூறிய வரிகளை பிரதான் தருகிறார்

Marx in the era of laissez fair capitalism, could not correctly know certain laws peculiar to the era of imperialism before hand, because imperialism, the last stage of capitalism (*இங்கு மாவோ லெனினை கையாள்கிறார்*) , had not yet emerged and the relevant practice was lacking, only Lenin and Stalin can undertake this task *என்று ஸ்டாலினையும் சேர்த்து மாவோ அப்போது பேசியுள்ளதைக் காண்கிறோம்.*

காந்தி பார்வையை நேரு எடுத்துக்கொள்ளாமையை விளக்கும்போது பிரதான் தரும் வரிகள்

Gandhi : I am afraid , Industrialism is going to a curse for mankind..industrialism depends entirely on your capacity to exploit

பிரதான் நேரு குறித்து is it not strange as how Jawaharlal, the author of Discovery of India, did not take into account this simple historical fact while initiating India on the path of progress? Or was he completely duped by the trickery of the compradore class, feudal who began to dominate increasingly the Indian ruling class? *என்று* soft *ஆக எம் எல் இயக்க பார்வையை பிரதான் வெளிப்படுத்துகிறார்.*

சைதன்ய கிருஷ்ணா, பிரதான் தோழர்களில் ஒருவர், இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார் (2020 *பதிப்பு*) . *அவர் தன் பார்வையில் வந்து நிற்கும் புள்ளி*

Had Gandhiji's vision of self sustained villages been worked upon, we would perhaps not have witnessed the shocking spectacle of migrant workers walking back to their native places

Gandhi's solution was integrating economics, politics and technology with ethics and keeping the welfare of the poorest and the weakest as the goal

வாழ்ந்துகாட்டியபடி பேசியும், பேசினால் அப்படியே வாழ்ந்து காட்டிய பெரும் மனிதரை , வாக்கு அரசியலில் மாட்டிக்கொண்ட கோடானுகோடி இந்தியர்கள் பொருட்படுத்தாமல் இருக்கும் மாபெரும் சோகம் , இம்மண்ணில் தான் தொடர்ந்து நடந்தேறிக்கொண்டிருக்கிறது.

may 28

சாமி சிதம்பரனார் ஏராள நூல்களை எழுதியவர். அவரின் 'தமிழர் தலைவர் பெரியார் ' நூல் தொடர்ந்து பேசப்படுகிற நூல். 1939ல் எழுதப்பட்ட ஒன்று. இணையத்தில் கிடைக்கிறது. 18 அத்தியாயங்களில் பண்டித தமிழ் புலமை எதையும் காட்டாமல் எழுதப்பட்ட நூல். பொதுவாக அதிகாரபூர்வ வரலாறாக பார்க்கப்படுவது.

இந்நூலை சந்தியா பதிப்பகத்தார் கொணர்ந்தனர். 2019க்கு பின்னர் பதிப்பு வந்துள்ளதா எனத்தெரியவில்லை.

சாமி சிதம்பரனார் அவர்கள் பெரியாரைவிட 21 வயது இளையவர். பெரியார் மறைவிற்கு 12 ஆண்டுகள் முன்னரே மறைந்தவர். சாமி அவர்களின் எழுத்துக்கள் 20 க்கும் மேற்பட்டு இணையத்தில் கிடைக்கின்றன.

இந்நூலில் இன்றைக்கு 85 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் தோற்றம் எப்படியிருந்தது என்கிற விரிவான சித்தரிப்பு கிடைக்கும். அவருடன் பயணித்தவர் என்கிற வகையில் சாமி சிதம்பரமாக எப்படி பெரியாரை ரசித்தார் என்கிற காட்சிகள் கிடைக்கும்.

வத்தலும் தொத்தலுமான குதிரை வண்டிப்பயணம்- இறங்கி நடந்துகொண்டே வண்டியையும் இழுத்துக்கொண்டு 9 கி மீ பயணித்தபோது, தெம்மாங்கு கிண்டல் கேலியுடன் பெரியார் உடன் வந்த சித்திரம். முண்டாசு கட்டிக்கொண்டு, சக தோழர்களுடன் படு தமாஷாக இருந்த காட்சி கிடைக்கும்.

பெரியார் சொல்வதை அப்படியே திரு வி க எழுதவேண்டும். பண்டித புலமையை சேர்க்கக்கூடாது. பாமரனுக்கு நான் எப்படி பேசுவோனோ அப்படியே போகவேண்டும் என்ற நிபந்தனை- கோப தாபம்- சமாதானம் என்கிற சுவையான காட்சியும் வரும். பெரியார் சுடச்சுட எப்படி பளிச்சென தயக்கமின்றி மனதில் பட்டதை பேசுவார் என்கிற பார்வை வெளிப்படும். இப்படி சுவையான செய்திகளும் நூலில் இருக்கின்றன.

நூலில் எங்கும் அண்ணா பற்றிய செய்தி ஏன் ஏதுமில்லை எனத் தெரியவில்லை. 1935 தொடங்கி அண்ணா பெரியாருடன் பயணிக்கலானார். ஈரோட்டில் தங்கி பத்திரிகை பணியும் ஆற்றியுள்ளார். பாரதிதாசன் பற்றிய செய்தி உள்ளது. அண்ணா என்கிற பெயர் இந்நூலில் எங்கும் இடம் பெறவில்லை. பின் தொடர்ந்த ஆண்டுகளில் சாமி மற்றும் அண்ணா உறவு எப்படியிருந்தது- திமுக உருவாக்கம் குறித்து அவர் என்ன கருதினார் என எனக்குத் தெரியவில்லை.

பெரியார் குறித்து படிக்க வேண்டியவர்களுக்கு நல்ல ஆரம்ப நூல் என இதைச் சொல்லலாம். ஒருவேளை இந்து தமிழ் திசை 2024ல் கொணர்ந்த பெரும் தொகுப்பிற்கான நூல் தலைப்பை சாமி சிதம்பரனார் நூலிலிருந்து எடுத்துக்கொண்டிருப்பார்களோ என எனக்குத் தோன்றுகிறது.

may 29

Who were Sudras - சூத்திரர் வரலாறு டாக்டர் அம்பேத்கரின் புகழ் வாய்ந்த ஆய்வுகளில் ஒன்று. 1946ல் இந்நூலை அவர் வெளியிட்டார். அவரின் நூல்களை பம்பாயில் வெளியிட்டு வந்த தாக்கர் சன்ஸ் நிறுவனம்தான் இதனையும் வெளியிட்டனர். சூத்திரர் ஆர்யரே- பின்னர் இறக்கப்பட்டனர் என்கிற முடிவை அம்பேத்கர் இதில் எட்டியிருப்பார். இக்கட்டுரையில் சுருக்கமாக , இது குறித்து பேசப்பட்டுள்ளது.

இந்நூலின் 1947 ஆம் பதிப்புதான், அம்பேத்கரின் நூல்தொகைகளில், ஆங்கிலத்தில் 7 வது வால்யூமிலும் (1990ல்) , தமிழ் தொகைகளில் வால்யூம் 13லும் (ncbh 1999) அப்படியே இடம் பெற்றது.

நான் இங்கு சொல்ல வரும் நூல் 1994ல் வாங்கிப்படித்த எ. பொன்னுசாமி அவர்களின் மொழிபெயர்ப்பில் வந்த 'சூத்திரர் வரலாறு' . தி நகர் அ ஆ பதிப்பகம் கொணர்ந்த நூல். இந்த மொழிபெயர்ப்பில் , அம்பேத்கர் எழுதிய நூலில் இருந்த முகவுரைத் தவிர இருக்க வேண்டிய 12 அத்தியாயங்கள் இல்லை. 10 தான் இருக்கிறது. 1946, 1947 மூல நூல் பதிப்புகளிலும், ஆங்கில வால்யூம் 7 லும் 12 அத்தியாயங்கள் இருக்கின்றன. தமிழ் வால்யூம் 13லும் இருக்கிறது.

ஆனால் பொன்னுசாமி மொழிபெயர்ப்பில் அத் 7 மற்றும் 12 இடம் பெறவில்லை. ஏனோ தெரியவில்லை. மொழிபெயர்ப்பாளர் குறிப்பிலும் ஏன் எனச் சொல்லப்படவில்லை. 1994ல் நான் படித்தபோது இதை உணர வாய்ப்பில்லாமல் போனது. அப்போது இன் டெர்நெட் வசதியில்லை. இப்போது ஒத்துப் பார்த்தபோது, இரு அத்தியாயங்களை காணாததை உணரமுடிந்தது. அது போல் அம்பேத்கர் preface எழுதிய நாள் என மூல நூலில், வால்யூம்களில் அக்டோபர் 10, 1946 என்றிருக்கும். பொன்னுசாமி நூலில் அக் 24 என்றுள்ளது. முழு prefaceம் மொழியாக்கம் பெறப்பட்டதாக உணரமுடியவில்லை.

சரி இந்நூலில் அம்பேத்கர் வெளிப்படுத்தும் கருத்தாக்கங்கள் சிலவற்றை மட்டும் தொட்டுக்காட்டியுள்ளேன். இனி டாக்டர் அம்பேத்கர் ...

" லட்சியங்களை அளவுகோல்களாகக் கொள்வது நல்லது. அளவுகோலின்றி ஏதும் செய்யமுடியாது. ஆனால் அந்த அளவுகோல் காலத்தினையும் சூழ்நிலைகளையும் ஸ்வீகரித்துக் கொண்டு மாறவேண்டும்.

எந்த ஓர் அளவுகோலும் நிரந்தரமானதல்ல. நமது அளவுகோல்களின் மதிப்பினை மறு மதிப்பீடு செய்யக்கூடிய சாத்தியம் எப்போதும் இருக்கவேண்டும். அந்த அளவுகோலுக்கு ஒரு புனித முத்திரை குத்திவிட்டால் அது எக்காலத்திலும் புனிதமாக்கப்பட்டுவிடுகிறது.."

(டாக்டர் அம்பேத்கர் புருஷ சூக்தம் பற்றி எழுதும்போது)

"ஆர்ய இனம் என்பதே ஓர் அனுமானந்தானே தவிர வேறொன்றுமில்லை. ...வேதங்கள் ஆர்யன் என்ற இனம் ஒன்று உண்டு என்பதையே அறியா . ஆர்யர்கள் இந்தியா மீது படையெடுத்தஎவ்வித தடயமும் இல்லை. இந்திய மக்களாகிய தசா தஸ்யூக்களை ஆர்யர் வென்று அடக்கியதற்கான தடயமும் இல்லை. ஆர்யர்கள் நிறத்தில், தசா தஸ்யூக்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்பதை வேதங்கள் ஏற்கவில்லை"

“ மேற்கத்தியர் ஆர்யர்கள் படையெடுத்தனர் என்றும், தசாக்களையும் தஸ்யூக்களையும் அவர் வெற்றிகொண்டனர் என இட்டுக்கட்டினர்…புதிய விளக்கங்கள் வெளிவரத் துவங்கியதும் மேற்கத்தொயரின் விளக்கங்கள் நீடிக்காது”

“சூத்திரர்கள் ஆர்யர்கள் என்ற முடிவு மண்டையில் ஆனி அடித்ததைப்போல் தெளிந்து நிற்கிறது. அவர்கள் சத்ரியர்கள். ஒரே சந்தேகம் சூத்திரர்கள் இனவழி கூட்டமா என்பதுதான்” (200க்கும் மேற்பட்ட பக்க நூலில் அம்பேத்கர் நான் பார்த்த அளவில் இரு இடங்களில் மட்டுமே திராவிட என்கிற பதத்தை பயன்படுத்துகிறார். அதேநேரத்தில் சூத்திரர் ஆர்யர்தான், பின் இறக்கப்பட்டனர் என விவாதிக்கிறார்)

“ஆரம்பத்தில் மூன்று வர்ணங்களே இருந்துள்ளன. சூத்திரன் தனியான வர்க்கமாக இருக்கவில்லை”

“ சூத்திரர்கள் ஏன் தாழ்த்தப்பட்டனர்? பிராமணர்களுக்கும் சூத்திரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டமே சூத்திரர் தாழ்த்தப்பட்டதற்கான காரணம்”

“ பிராமணர்கள் சத்ரியர்களைச் சூத்திரர்களாகத் தாழ்த்த பயன்படுத்திய தந்திரம், அவர்களுக்கு பூணூல் போட மறுத்ததே”

“ ஆரம்பகால ஆர்ய சமுதாயம் எல்லா பிரிவினர்களையும் உபநயனத்தினைப் பொறுத்தமட்டில் ஒரே விதமாகத்தான் நடத்தியுள்ளது” (பெண்களுக்கும் உபநயனம் இருந்தது)

“ உபநயனம் இல்லையெனில் அறிவுப்பாதை அடைக்கப்படும். அறிவு, சொத்து உரிமை இருபெரும் தகுதிகளை உபநயனம் தரும். உபநயனம் செய்து வைக்கும் உரிமை பிராமணனுக்கு மட்டுமே உண்டு”

“ சூத்திர மன்னர்களுக்கும் பிராமணர்களுக்கும் சச்சரவுகள் இருந்தன. பிராமணர்கள் கொடுமைகளுக்கும் அவமரியாதைக்கும் உள்ளாயினர். வெறுப்பு கொண்ட பிராமணர் உபநயனம் செய்ய மறுத்துவிட்டனர்”

“இந்தோ ஆர்ய சமூக சூத்திரன் ஒரு இனமா, கூட்டமா, குடும்பங்களின் கலவையா நமக்கு தெரியாது. “

டாக்டர் அம்பேத்கர் இந்தோ ஆர்ய சூத்திரர் குறித்து வந்தடைந்த முக்கிய புள்ளிகள் மேலே சொன்னவைதான். அப்போது இந்து சூத்திரர் யார் என்கிற கேள்வி அம்பேத்கரின் ஆய்வின் தொடர்வினையாக தொக்கி நிற்கிறது.

நூலை வாசிக்க முடியாதவர்க்கு இச்சிறு கட்டுரை உதவக்கூடும்.

may 30

தலைமைஸ்தானம் அல்லது முக்கிய பொறுப்பு/ பதவி என இருப்பவர்களிடம் ஒருவகை வியாதி மனப்பாங்கும் சேர்ந்தே அமைந்துவிடும் போலும். தங்கள் seat power கண்டு அவர்கள் அதிசயித்து போகிறார்கள். தான் அதற்காகவே பிறந்தது போல நினைத்துக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். கண்ணாடி பார்க்கும்போது, கற்பனை செய்துகொண்ட கடவுள் வடிவமாக தன் சொந்த உருவம் தோற்றப் பொலிவை (தோற்ற பிழையை) தந்துவிடும் போல.

பொறுப்பிற்கு வரும்போது, மிகச் சாதாரண மனிதனுக்கு இது கிடைத்தது பெரும்பேறு என்றுதான் ஆரம்பிக்கிறார்கள். நாளாக ஆக , தான் தவிர்க்கமுடியா பேருருவம் என கற்பனை செய்துகொள்கிறார்கள். தான் தொட்டது பொன்னாகும் என்கிற மைதாஸ் உள் புகுந்து விடுவான் போலும். தன் வாயிலிருந்து வருவெதெல்லாம் உன்னதமானது , அதுவே சட்டமாக வேண்டும் என எதிர்பார்க்க ஆரம்பிக்கிறார்கள். இவருக்கு துதிபாட, திருபள்ளிஎழுச்சி செய்திட, அன்றாட அலங்கார பூஜைகள் செய்திட ஏராள அமைப்பு பூசாரிகள் கிடைத்துவிடுவர். அவருக்காக நீக்கமற கம்பு சுத்தும் கழகங்கள்/ ஷாகாக்கள் தோற்றுவிக்கப்படும்.

எவரிடமும் காதுகொடுத்து கேட்கும் பழக்கம் நின்றுபோகிறது. தனக்கு எல்லாம் தெரியும் என்கிற ஏகாம்பரத்தனம் எப்போதும் அவரிடம் விழிப்பாக கண் உருட்டிக்கொண்டிருக்கும். எதையும் தெரிந்து பேசவேண்டும் என்கிற கட்டாயமோ, மன நெறியோ இவருக்கு இருப்பதில்லை. இவரை வைத்துத்தான் ஓட்டவேண்டும் என ஒட்டுமொத்த அமைப்பும் அவரின் ஏகபோக 'தான் தோன்றித்தனத்திற்கு' சிறைபடுகிறது. தான் செய்யும் பேசும் எதற்கும் பொறுப்பேற்க வேண்டியதில்லை என்கிற புது மாதிரி மனித சாதியை , அது ஏதோ சாதனைப்போல, மனசாட்சி என்கிற பயிற்சி பயம் ஏதுமின்றி இவர் உருவாக்க தயங்கார்.

தினந்தோறும் எங்கும் எப்போதும் எதிலும் அவரே தெரிவது போல் பார்த்துக்கொள்ள ஏற்பாடுகளை அவர் செய்ய முயற்சிப்பார். விமர்சகர்கள் தோலை உரிக்க சதா காலமும் குயுக்தியாக சிந்தித்துக்கொண்டேயிருப்பார். மீறி விமர்சகர்கள் திமிறி எழுந்தால், பாருங்கள் நான் எவ்வளவு பாவம் என்னைப்போய் என்கிற சுய இரக்க காட்சிகளை பின்னுவார். நான் இப்படிப்பட்ட சாமான்யன் என அந்த அவதாரம் எளிய வேடம் காட்டும்.

அவரின் மனம் தனக்கான பீடத்தை எப்படியெல்லாம் மேல் உயர்த்த வேண்டுமோ, அதற்கான காய்களை திட்டமிட்டு நகர்த்திக்கொண்டிருக்கும். எப்போதும் எங்கும் அச்சத்துடன், படபடப்புடன் அவர் உள் மனது செயல்படும். வெளியே அசகாய சூரன் என்கிற buildup காட்டும்.

மக்களின் ஆதரவு இருப்பதாக தெரிந்தவுடனேயே, அது தன் அவதார மேன்மைகளை , அது எவ்வளவு அவலமாக அலங்கோலமாகத் தெரிகிறது என கவலைப்படாமல் செய்யும். வெற்றி என்றால் நூறு சதத்தையும் அம்மனம் அபகரிக்க விழையும். சுற்றி நிற்பவர்களை அப்படி சொல்லவேண்டும் என்கிற சூழலை உருவாக்கும். தோல்வி வந்தால், சுற்றி நின்றவர்களை இன்னும் கண்ணில் படுகிற எவரையும் சேர்த்து , அவர்களால்தான் என புகார் பாடும். தான் மட்டும் தனித்து எவ்வளவுதான் செய்ய முடியும், எல்லாம் துரோகிகள் என முத்திரை குத்தும்.

தன்னைப் பற்றி உருவாக்கப்படும் மிகை மதிப்பீடுகளை larger than life images யை அம்மனம் அப்படியே இன்னும் கொஞ்சம் கூட சேர்த்துக்கொண்டு நம்பும். தான் ஒருவன் மட்டுமே என்கிற நிகிலிச போக்கிற்கு உள்ளாகும். நடிப்பு தான் இயல்பு எனக் கருதும். வேடப்புனைவே வாழ்க்கை

எனக் கருதும். உள் மனது hallow என்பது பற்றி அதற்கு அறிய நேரமே தராது. எப்போதும் busy ஆக இருப்பது போல் காட்டும். பேசுவதும் பறப்பதும் தான் அதன் busyக்கான அடையாளங்கள். மன சினுங்கல் அதற்கு வரக்கூடாது என அதன் பரிவாரங்கள் விழிப்புடன் இருப்பர். அவர்களுக்கு தெரியும் அவர் அழிவுடன் தாங்களும் மூழ்கிபோவோம் என. மன சிக்கலுக்கு அமைப்புகளில் மருந்து இருந்தும், ஆஸ்தான மருத்துவர்கள் எல்லாம் நலம் என அறிக்கை கொடுத்துவிடுவர்.

எப்பவாவது இவர் பேசாமல் ஞானிகள் போல் காட்டிக்கொள்வார். பேசத்தொடங்கினால் அவ்வளவுதான்….. அமைப்பிற்குள்ளும் சத்தம் கேட்க துவங்கியுள்ளது…அபத்தம் படு அபத்தமென…

30-5-2024

may 31

சாம் பிட்ரோடா நூலில் தோழர் குப்தா

சாம் பிட்ரோடா அவர்களின் The Idea of Democracy *குறித்து இதற்கு முன்னர் இரு இடுகைகளை செய்திருந்தேன்.* 2024- *இந்த ஆண்டு வந்த புத்தகம். அவர் தன் நூலில் எங்காவது டெலிகாம் தொழிற்சங்கம் குறித்தோ, தோழர் குப்தா குறித்தோ எழுதியிருப்பாரா என்ற கேள்வி என்னுள் இருந்தது.*

240 *பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகத்தில் பக்* 172 *ல் தோழர் குப்தா பெயரும் ரகுபீர் சிங் பெயரும் இடம் பெற்றுள்ளன. ரகுபீர் பற்றி ஒரு வரி செய்தி, அவர் கைத்துப்பாக்கியுடன் அலுவலகம் வருவாரா என்பதுதான். காங்கிரஸ் சார்பாக இயங்கிவந்த* FnTo *என்கிற இயக்கத்தலைவர் அவர். அவர் துப்பாக்கி கதை சிற்றூரில் இருந்த என்வரை அப்போது பரவியிருந்தது.*

NFTE *இயக்க மாபெரும் தலைவர் தோழர் குப்தா குறித்து உயர் மதிப்பீடும், கம்யூனிஸ்ட் என்றும், அதே நேரத்தில் அவர் கம்யூட்டர்மயம் வேலைவாய்ப்பை ஒழித்துவிடும் என அஞ்சினார் என்ற செய்தியும் பிட்ரோடாவால் சொல்லப்பட்டுள்ளது. ஊழியர்களின் உணர்வை உயர் நிர்வாகத்திடம் எடுத்துச் சொல்லி, அச்சத்தை போக்கக்கூடிய வகையில் உறுதிமொழிகளையும் அவற்றின் நடைமுறையாக்கத்தையும் தோழர் குப்தா உறுதி செய்பவராக இருந்தார் என்பது நம்மைப் போன்றவர்க்கு தெரிந்த குப்தாவின் மறுபக்கம். அதேபோல் கம்யூட்டர் வருவதால் வேலை போய்விடும் என அன்று , சில தோழர்கள் அரசியல் போட்டியில் செய்திட்ட அதீத பெரும் பயமுறுத்தல்களிலிருந்து தொழிலாளர்களை விடுவித்து, நம்பிக்கை கொடுத்து அனைவருக்கும் கேடர் சீரமைப்பு வழி மூலம் கம்யூட்டர் பயிற்சியுடன் உயர் சம்பளத்திற்கும் அழைத்துச் செல்ல, குப்தா பிட்ரோடாவை சம்மதிக்க வைத்த காட்சிகள் நம்மால் மட்டுமே உணரத்தக்கவை.*

1989 *தீபாவளி பரிசென* BSc First class *ஊழியர்களிடம் இருந்தால்* straight JTo *அதிகாரி பதவி என்கிற ஏற்பை பிட்ரோடா செய்தும் , தொழிற்சங்க* rivalry *காரணமாக, அதை அவரால் அமுல்படுத்தமுடியாமல் போனது.*

அவர் சேர்மனாக வருவதை சங்கங்கள் எதிர்த்தன. அமெரிக்க வேலை, தனியார்மயத்திற்கானது என எதிர்த்தனர் என பிட் ரோடா எழுதியது ஏனோ? தோழர் குப்தாவை பொறுத்தவரை காந்தி மற்றும் டாங்கேவிடமிருந்து அவர் கற்று நடைமுறைப்படுத்தியது Hold the bull by horns. *எனவே எவருக்கும் வாய்ப்பளிக்காமல் , அவர் குறித்து முன் கூட்டிய அனுமானம் கொள்கிற கம்யூனிஸ்ட் அல்ல அவர்-* prejudice *கொண்ட கம்யூனிஸ்ட் அல்ல அவர். வேறு அரசியல் சார்புடைய டெலிகாம் தலைவர்களுக்கு அமெரிக்க ஊடுருவல் என்கிற எண்ணம் இருந்திருக்கலாம். தொழிற்சங்கங்களை வீழ்த்திட பிட் ரோடா என்கிற பயம் தோழர் குப்தாவிற்கு அறவே இல்லை. சாம் பிட்ரோடா அப்படி எழுதியிருப்பது அதீத ஊகம். அவர்கள் எனக்கு நண்பர்கள் ஆயினர். ஒத்துழைத்தனர். டெலிகாம் புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டதில் தொழிற்சங்க தலைவர்களுக்கும் பங்கு இருக்கிறது என்கிற நேர்மையான பதிவையும் சாம் செய்துள்ளார்.*

சாம் பிட் ரோடாவின் பக் 172 *வரிகள் , அந்நாட்கள் நினைவிற்கு என்னை கொண்டு சென்றது. இந்நூலில் சாம் எழுதிய வரிகளைத் தந்துள்ளேன்.*

I had a new set of challenges. While at C DOT we had over 500 people, at the telecom commission we had as many as 5,50,000 employees- manual labourers, manufacturing workers, field operators, engineers etc.

The unions were hostile to my becoming the chairman because they believed, through rumours, that I was planted by vested American interests to privatise telecom and, in the process, kill the labour unions. They were determined to make my life miserable.

I recall how one one of the leaders, Raghubir Singh, used to bring a loaded gun to the office- that I was shocked at this was an understatement.

The other leader , Om Prakash Gupta, a communist , was very concerned about my technology background. He firmly believed that computers were invented to eliminate jobs. Since I was pushing for computerisation of the railway reservation system, it was an area of concern for many in the government. The labour unions , particularly, were dead against my so called capitalist and western ideas.

Here also, the Gandhian leadership style came to my aid in winning labour leaders' hearts and minds through long conversations with them steeped in truth, trust and love. I realised that they were great people who had never received a proper hearing or attention from the leadership. These labour leaders eventually became close friends, came home for dinner and worked to support me at every step. They were part of telecom revolution in India.